ஸ்ரீராம! ஜெயராம!!

ராமர் & ஹனுமான் பாடல்கள்

கலைமாமணி

டாக்டர் **உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்**

ஸ்ரீ ராம்! - ஜெய ராம்!

ஸ்ரீ ராம்! - ஜெய ராம்!

ஆசிரியர்

கலைமாமணி

டாக்டர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்

நெய்தல் பதிப்பகம்

நூல் விவரம்

- நூற்பெயர் :
  ஸ்ரீ ராம்! - ஜெய ராம்!
- ஆசிரியர் :
  கலைமாமணி
  டாக்டர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்
- உரிமை :
  எஸ். அம்சவள்ளி
  (W/o, Late. Dr. Ulunthurpettai Shanmugam)
- அச்சிட்டோர் :
  பிராசஸ் இந்தியா
  294, இராயப்பேட்டை நெடுஞ்சாலை,
  இராயப்பேட்டை, சென்னை - 14.
- பதிப்பு : 2011
- பக்கம் : 92
- விலை : **55/-**
- நூலாக்கம் :
  டெலிபாய்ன்ட்
  16, சின்னப்ப தெரு,
  திருவல்லிக்கேணி,
  சென்னை - 5.
  Ph : 2848 3750
- For Sales &
  Enquiries Contact : **S. AMSAVALLI**
  14, Amirtham Avenue, Bharani Street,
  Velacherry, Chennai - 600 042.
  Mobile : 9380297675, 9566042884
  email : ussankarram@gmail.com
  ussankarram@yahoo.com

- காப்பிரைட் சட்டத்தின் கீழ் பதிவு பெற்றுள்ள இந்நூலில் இருந்து எப்பகுதியையும் முன் அனுமதியின்றிப் பிரசுரிக்கக்கூடாது. தவறினால் சிவில், கிரிமினல் சட்டங்களின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

வெளியீடு : நெய்தல் பதிப்பகம்

எண் : 5, தங்கவேல் வைத்தியர் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை -5
Phone : 2848 3860
Mobile : 98415 37495
Email : neithalp@yahoo.in



சண்முகனார் சாஸ்வதமாய் வாழ்கிறார்!

— வாலி —

ஓர்
ஒப்புராயர் இல்லாச்
சுப்புராயச் செட்டியாரும்; பாற்-
கடலில் விளையாது - நற்றாயின்
குடலில் விளைந்த
அமிர்தம்
அம்மையாரும்;

ஆற்றிய தவத்தால்
அரும்பிய பிள்ளை;
தொன்மைத் தமிழ்த்தாயின்
தோளில் தொத்திய கிள்ளை;

என்
உழுவலன்பர்
உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்;
அருங்குண வதியாம்
அம்சவல்லியாரின்
மஞ்சளில்;
மாங்கல்யத்தில்;
ஒளிவீசி நின்ற
ஒண்முகம்;

இதழ்களில்
இளம் புன்னகையை வைத்து
தன்வயம் எவரையும் ஈர்த்த
தண்முகம்;
நுவலும் பேச்சிலும்.
நோற்கும் பாட்டிலும்.
நுழைபுலம் துலங்க நிற்கும்
நுண்முகம்!

* * *

உருவம் குறில்;
உள்ளம் நெடில்; அவன்
உண்ணா
உயர்தமிழ் குடியிருக்கும் குடில்;
ஆறுமுகனையும்.
ஆனைமுகனையும்.
அதிகம் பாடியதாய்
ஆரைச் சொல்வது அவனை விடில்?

* * *

இவனால் தான்
இவன் பிறந்த
உளுந்தூர்ப்பேட்டை - தமிழ்
எழுந்தூர்ப்பேட்டை ஆனது;
இவன்
இயற்றிய
தனிப்பாடல்களாலும்;
திரைப்பாடல்களாலும்;

கானத்தமிழ்
கடல்கள் தாண்டி -
உலகத்தார்
உட்செவிக்குள் போனது!

* * *

வேங்கடவன்;
வேலவன்;
வேழமுகன்;
வாயு மகன்;
இன்னும்
இறையருள் பெற்ற.....

வேதாத்தரி;
விசிறி சாமியார்;

என
எந்த –
இறையும்;
இறையடியாரும் மிச்சமின்றி.....
இவனது –
பாடுபொருள் ஆயினர்; இவன்
பசுந்தமிழில் தோய்ந்து போயினர்!

*   *   *

கண்ணதாசன் போல் – இந்தக்
கவிப்பெருந் தகையும்....

பெரியாரிடமிருந்து
பெருமாளிடம் வந்தவன்;
தான்பெற்ற இன்பம் – இந்தத்
தரணிபெற வேண்டி –

ஆன்ம
அனுபூதியை –
வையம் உய்யுமாறு
வண்ணச் சிந்துகளில் தந்தவன்!

*   *   *

சுருங்கச்
சொன்னால்....

இருந்தமிழ்
இவனது
நாவகம் தன்னில்
சேவகம் செய்தது; இவன்
ஏந்திய
எழுதுகோல் வழி...
அது
அகிலமெங்கும்
அருட்பயிர் தழைக்க - இடை
அறாது ஞானமழை பெய்தது!

*   *   *

பக்திப்
பனுவல்களை மட்டுமல்ல; அவன்
பாடாத துறை
பாக்கியென்று எதைச் சொல்ல?

*   *   *

கோடம்பாக்கத்திலும் - அவன்
கோலோச்சிய மேதை;
'சீர்காழி' யும் -
'சிவாஜி' யும் -
அகத்தியனாயும்; சோழ -
அரசை ஆண்ட ராஜராஜனாயும் -
வெள்ளித்திரை
வீதியில்
உலா வர
உளுந்தூர்ப் பேட்டை தான்....
போட்டுக் கொடுத்தான்
பாட்டுப் பாதை!

*   *   *

அவன்
ககனம் ஏறினான் - தமிழ்
கானங்களை இங்குவிட்டு; அவன் -
இறந்தும்
இறவா திருப்பதை -
இசைக்கிறது
இசைத்தட்டு!

* * *

ஆம்;
உளுந்தூர்ப் பேட்டை சண்முகம் - எனும்
உயரிய கவிஞரேறு....
இசையொடு
இசையில் வாழ்கிறான்;
இசை தழுவும் - எண்
திசையில் வாழ்கிறான்!

* * *

ஏட்டிலும்
பாட்டிலும் - அவனது
ஏரார் புலமையினை
ஏந்தி நிற்கின்றன....

அவன்
அழகுற -
வடித்து வைத்த
வண்ணத்தமிழ்ச் சொற்கள்; அவற்றின்
வண்ணங்கெடாது காக்கின்றனர்
வாரிசாய் வந்த மக்கள்!

* * *

நல்ல மனைவி;
நல்ல மக்கள்;

நல்ல பெயரன்கள்;
நல்ல பெயர்த்திகள்;

இவர்களின்
இதயங்களில் மட்டுமல்ல -
எம்மனோர்
எண்ணங்களிலும்...

சண்முகனார் கீர்த்தி
சாஸ்வதமாய் நிற்கும்;
சமூகம் - அவனது
சிந்துகளிலிருந்து -
வாழ்வாங்கு
வாழ -
கருத்துகளைக்
கற்கும்!

*   *   *

வாலி

கலைமாமணி
டாக்டர். உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்
ஒரு சிறு குறிப்பு



கவிஞர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம், விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்ப்பேட்டையில் 10-04-1933 ஆம் ஆண்டு பிறந்தார். தொடக்கக் கல்வியைச் சொந்த ஊரில் கற்று, பின்னர் உயர்நிலை, கல்லூரிக் கல்வியை திருச்சி, அர்ச்.சூசையப்பர் கல்லூரியில் பயின்று, சென்னை பச்சையப்பனில், டாக்டர் மு.வ. அவர்களின் மாணவனாக எம்.ஏ. முதல் வகுப்பில் 1960-ல் தேர்வு பெற்றார். எம்.லிட் ஆய்வும், டாக்டர் பட்ட ஆய்வும் மேற்கொண்டு பட்டங்கள் பெற்றுள்ளார். 1972 வரை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகவும், அதன்பின் 1974 வரை, சென்னை சேலையூர் எஸ்.ஐ.வி.இ.டி கல்லூரியில் துறைத்தலைவராகவும், பேராசிரியராகவும் பணியாற்றினார். 1975 முதல் 1978 வரை தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகத்தில் மொழி பெயர்ப்புத்துறை உதவி இயக்குநராகப் பணியாற்றிய இவரை 1978-ல் அரசு தமிழ் பண்பாட்டு மைய இயக்குநராக நியமித்தது.

நாடறிந்த பாவலராகிய இவர் பெற்ற விருதுகள் பல. சென்னை ஆரோக்ய ஆசிரமம், இவரின் பக்திப் பாடல்களின் சிறப்பைப் பாராட்டி 'பக்த சிகாமணி' (1971) என அழைத்தது. தமிழ் சான்றோர்களின் அமைப்பான திருப்பனந்தாள் பாவலர் மன்றம், இவரின் சந்தக் கவிதைகளைப் பாராட்டி 'இசைக்கவியரசு' (1972) என்ற பட்டத்தை அளித்தது. 1975-ல் தமிழ்நாடு அரசு இயலிசை நாடக மன்றம் மிகச் சிறந்த விருதான 'கலைமாமணி' விருது தந்து தங்கப்பதக்கம் சூட்டி மரியாதை செய்தது. சென்னை உலகசமூதாய சேவா சங்கம் இவரின் தவப்பயிற்சிக்கு 'அருட்செல்வர்' (1983) என்ற பட்டம் சூட்டிற்று. சென்னை இலட்சுமி நாராயணா நிறுவனம், ஒலிப்பதிவுத்துறைப் பக்திப்

பாடல்களில் இவர் முன்னணி வகிப்பதைப்பாராட்டி 'தெய்வீகக் கவிஞர்' (1989) என்ற விருதினை உவந்தளித்தது. சென்னை திருவல்லிக்கேணி முருகனடியார்கள் சங்கம், இராஜா அண்ணாமலை மன்றத்தில் இறை இசை விழா நடத்தி இவருக்கு 'பெருங்கவிஞர்' (1994) எனும் பெருமையைத் தந்தது.

கவிஞர் உ.பே.ச. அவர்கள், அகவுணர்வுப் பாடல்கள், சமுதாயப் பாடல்கள், தேசிய உணர்வுப் பாடல்கள், மொழிப்பெயர்ப்பு பாடல்கள், பக்திப் பாடல்கள், தன் உணர்வுப்பாடல்கள், கவியரங்கப் பாடல்கள், நிகழ்ச்சிப் பாடல்கள் என பல்வேறு துறைகளில் இயற்றிய பாடல்கள் ஐயாயிரத்தை எட்டும் இவர் எழுதிய மகாகவி பாரதியாரின் வரலாற்றை யாழ்ப்பாணம் 'ஈழநாடு' இதழ் தொடர்கட்டுரையாக வெளியிட்டுள்ளது. இவரின் பக்திப் பாடல்கள் மூவாயிரத்திற்கும் மேல் இசைப்பதிவாகி முன்னணிப் பாடகர்களால் பாடப்பெற்று ஒலி நாடாக்களாகவும், குறுந்தகடுகளாகவும், உலகெங்கும் உலா வருகின்றன, மக்களை மகிழ்விக்கின்றன.

இவர் இருபதுக்கும் மேலான சிறந்த வடமொழி தோத்திரப்பாக் களை தமிழில் மொழிப்பெயர்த்துள்ளார். அவற்றுள் பம்பாய் சகோதரிகள் பாடிய T.Series தயாரிப்பில் வெளிவந்த ஸ்ரீ வேங்கடேச சுப்ரபாதம், வெளியிடப்பட்ட அன்றே ஒரு லட்சம் ஒலி நாடாக்கள் விற்றதனால் 'தங்கத்தகடு' (Golden Disk) விருதினைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

வானொலி, தொலைக்காட்சி, தனியார் தொலைக்காட்சி, இசைமேடைகளில் இவரது பாட்டும், பேச்சும், அவ்வப்போது இடம்பெறும், திரை உலகிலும் இவர் பல பாடல்களை இயற்றியுள்ளார்.

தமிழ்நாட்டின் பெருங்கவிஞரான இவர் தனது மனைவி திருமதி. அம்சவள்ளியுடன் 48 ஆண்டுகள் இல்லறம் நடத்தி மக்கட் செல்வம் பெற்று, தனது இறுதிக் காலங்களை ஆன்மீகத்தில் பெரும் ஈடுபாடுடன் கழித்தார். உலகத் தமிழர்களின் மனதில் குடிகொண்ட அவர் தனது 71 ஆம் வயதில் 24-08-2003ல் இறைவனடி சேர்ந்தார்.

நெய்தல் பேசுகிறது....

புரத்தில் பிறந்தவர் மகாகவி - ஆம்
எட்டைய புரத்தில் பாரதியார்.
பட்டியில் பிறந்தவர் இரு கவிஞர்
சிறு கூடல்பட்டி கண்ணதாசன் - வடுகப்பட்டி வைரமுத்து
கோட்டையில் பிறந்தவர் சுந்தரம்
பாட்டுக்கோட்டை - யாம்
பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்
அரங்கத்தில் பிறந்தவர் வாலிப வாலி
ஸ்ரீரங்கம் என்னும் திருவரங்கத்தில்
குடியிலே பிறந்தவர் ஒரு கவிஞர்
ஆலங்குடி சோமு
பேட்டையில் பிறந்ததோ பன்முகம்
இசைப் பண் முகம் - அவர்தான் எங்கள்
உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்
தந்தை சுப்புராயர் தாயார் அமிர்தம் - என்றும்
சிந்தை யெல்லாம் பாட்டு அமிர்தம்
எந்தை தமிழுக்கு சண்முகம் அம்சம் - துணைவி
வந்தார் அம்ச வள்ளியாம் அம்சம்.

இறைவனைத் துயில் எழுப்ப சுப்ர - பாதம்
இம்மக்கள் விழித்திட எழுப்பிட இசைப் - பாடல்
எழுப்புவது இவர்வேலை யானால்.

இவர் ஊரென்ன - உளுந்தூர்ப்பேட்டை
பேட்டை துள்ளி ஆடி எழ வைக்கும் பேட்டை

ராஜபாட்டை யாம் உளுந்தூர்ப்பேட்டை
தமிழகத்து பாட்டு தமிழ்ப்பேட்டை

மு.வ.வின் மாணவராம் சண்முகம்
முதன்மையான பேராசிரியராம் சண்முகம்
மொழி பெயர்ப்பு உதவி இயக்குநர் சண்முகம்
தமிழ் பண்பாட்டு மைய இயக்குநர் சண்முகம்
பதவிகளுக்கும் பட்டங்களுக்கும் பிடித்ததொரு சண்முகம்
எங்கள் உளுந்தூர்ப்பேட்டை டாக்டர் சண்முகம்

பெருங்கவிஞர் சண்முகம்
தெய்வீகக் கவிஞர் சண்முகம்
இசைக் கவியரசு சண்முகம்
பக்த சிகாமணி சண்முகம்
கலை மாமணி சண்முகம்
அருட் செல்வர் சண்முகம்

இவையெல்லாம் கவிதை அடைமொழிகள் அல்ல!
உளுந்தூர்ப்பேட்டை மைந்தனின் உன்னதப் பட்டங்கள்

தமிழுக்கு ஒரு உ.வே.சா. - இசை
மெட்டுக்கு ஒரு **உ.பே.ச.** - இவர்
உளுந்தூர்ப்பேட்டை சண்முகம் - மட்டுமல்ல
உலகம் **பே**சும் **ச**ண்முகம் - உ.பே.ச.

சுப்ரபாதம் தந்தவிருது தங்கத்தகடு
எப்பவும் இசைக்கும் உந்தனது குறுந்தகடு
மக்களின் இதயம் மகிழ்ந்து தங்கும்தகடு.
திக்கெலாம் ஒலிக்கும் தேமதுர தமிழ்த்தகடு.

இத்தகைய மாபெரும் கவிஞரின் பாடல்கள்
சித்தமாய்ப் பதிப்பித்து வெளியிடும் நெய்தல்

செய்ததொரு மாபெரும் பாக்கியம், புண்ணியம்
செய்யவைத்த பெருமை **பிரீத்திகாவைச்** சாரும்.
வாய்ப்பளித்த **சாதகப்பறவை சங்கரைச்** சாரும்.
சேய்போல பாடல்களைச் சேமமுறக் காத்திட்ட
உ.பே.ச. குடும்பம் உன்னதமாய் வாழும்.
இனி பேச வேண்டியதிலை உ.பே.ச பண்பாடும்

இனிய மழலைப் பாட்டு
கனிய இயற்கைப் பாட்டு
பணிய பரமன் பாட்டு
துணிய எழுச்சிப் பாட்டு
உணர காதல் பாட்டு
உயர முன்னேற்றப் பாட்டு
மலர குடும்பப் பாட்டு
வளர அறிவுப் பாட்டு
பற்பல தெய்வப் பாட்டு
அற்புதத் தலைவர் பாட்டு
உருக உள்ளப் பாட்டு
மருகா தெளிவுப் பாட்டு
பன்மொழிப் பெயர்ப்பு பாட்டு
பண்டித வித்தகப் பாட்டு
நிப்பாட்டு - நிப்பாட்டு
என்ன பாட்டு இல்லை.
அனைத்தும் சண்முகம் பாட்டு
அத்தனை பாடலும் தந்ததைப்
பதிப்பித்துத் தந்தது நெய்தல்
தமிழுலகுக்கு உ.பே.ச. வின் தரமிகு பாடல்களை
அமிழ்தாய்ச் சுவைத்திட அன்புடன் வெளியிடுகிறோம்.

பொருளடக்கம்

ஸ்ரீ ராம் - ஜெய ராம் 17

வீரமாருதி 47

ஸ்ரீ ராம் - ஜெய ராம்!

1. ரகுராமா - ஜெய ராமா

ராம் ராம் ராம்
ராம் ஸ்ரீராம் ஜெய் ராம்

ரகு ராமா..... ஜெய ராமா
குலம் விளங்க அவதரித்த ஸ்ரீராமா

ஸ்ரீ ராம் ஜெய ராம் ஜெய ஜெய ராம்
நாளும் துதிப்போம் ஜெய ராமா

கோசலை குமாரா அயோத்தி ராமா
பேரழகு தவழ்கின்ற சுந்தர ராமா
தாடகையை வதம் செய்த கோதண்ட ராமா
தவமுனிவர் போற்றுகின்ற சாந்த ராமா

ஸ்ரீ ராம் ஜெய ராம் ஜெய ஜெய ராம்
நாளும் துதிப்போம் ஜெய ராமா (ரகு ராமா)

சிவதனுசை முறித்து விட்ட சிவராமா
சீதையை காதல் செய்த ஜானகி ராமா
மிதிலையிலே மணம் முடித்த கல்யாண ராமா
வனவாஸம் மேற்கொண்ட வைராக்ய ராமா

ஸ்ரீ ராம் ஜெய ராம் ஜெய ஜெய ராம்
நாளும் துதிப்போம் ஜெய ராமா (ரகு ராமா)

ஹனுமனின் நெஞ்சில் வளர் பட்டாபி ராமா
ராவணின் பகை முடித்த ராஜா ராமா
சத்தியத்தின் காவலனே உத்தம ராமா
சக்ர வர்த்தித் திருமகனே தசரத ராமா

ஸ்ரீ ராம் ஜெய ராம் ஜெய் ஜெய ராம்
நாளும் துதிப்போம் ஜெய ராமா (ரகு ராமா)

கால காலம் வாழ்கின்ற மூலராமா
பாற்கடலில் பள்ளி கொள்ளும் அனந்த ராமா
ஏழுமலை நாதனே வேங்கட ராமா
ராம ராம என்பவர்க்கு காருண்ய ராமா

ஸ்ரீ ராம் ஜெய ராம் ஜெய ஜெய ராம்
நாளும் துதிப்போம் ஜெய ராமா (ரகு ராமா)

2. இராமனின் பாணம்

ஒரே பாணம் தான்
ராமனின் பாணம்
ஒரே தாரம் தான்
சீதையின் யோகம்
ஒரே பாசம் தான்
சகோதர பாசம்
ஒரே பார்வை தான்
தர்மத்தின் பார்வை

ஹரே ராம் சீதாராம் ஹரேராம் சீதாராம்
ஹரே ராம் சீதாராம் ஹரேராம் சீதாராம்
(ஒரே பாணம் தான்)

ராம நாமம் சொல்லச் சொல்ல பயம் நீங்குதே
ராம நாமம் சொல்லச் சொல்ல ஜயம் ஓங்குதே

தந்தை சொல்தானே மந்திரம் என்றானே
வனவாசம் என்றாலும் மனம் மகிழ்ந்தானே
அரண்மனையும் நன்று ஆரண்யமும் நன்று
இரண்டுமே ஒன்று தான் சமம் என்றானே

அன்பு எந்தன் நோக்கம்
பண்பே எந்தன் வாழ்க்கை
ஒன்றே குலம் என்றான்
நெஞ்சில் என்றும் நின்றான்
கல்லும் ஒரு பெண்ணானது
கால் குறடும் நாடாண்டது (ஒரே பாணம் தான்)

சிவதனுசை முறித்தான் பரசுராமனை ஜெயித்தான்
தீயவரை வேரோடே அழிக்க வந்தானே
வாலியையும் வதைத்தான் சுக்ரீவனை அணைத்தான்
அநுமனுக்கு சிரஞ்சீவி வரம் தந்தானே

விபீஷணை வாழ்த்தி
ராவணனை வீழ்த்தி
ஜானகியை மீட்டு
நீதியினைக் காத்து

எந்நாளும் ஒரு பொன்னாளென ராமராஜ்யம் கண்டான் அவன்
(ஒரே பாணம் தான்)

3. ஸ்ரீ ராமனின் நாமம்

தினம் தினம் ராமனின் திரு நாமம்
ஜெபிப்பவர் வாழ்வினில் ஜெயமேதான்
நினைப்பது யாவும் நிறைவேறும்
நெஞ்சினில் நிம்மதி உருவாகும்
உரைத்திடு ஸ்ரீ ராம் ராம் என்றே - ஸ்ரீ ராம் என்றே
ஸ்ரீராம் ஸ்ரீராம் ஸ்ரீராம் ஸ்ரீராம்
(தினம் தினம்)

மனத்தினில் தூயன் வனத்திலும் நேயன்
மனிதரில் தேவன் அவன் தானே
பூமியில் அறம் காக்க வந்தனனே
பொறுமையின் சிகரமாய் நின்றனனே
(தினம் தினம்)

சொல்வதும் ஒன்றே செய்வதும் நன்றே
வில்லெய்தும் அம்பும் ஒன்றே தான்
தாரமும் ஒன்றே தான் என்றனனே
தர்மமே தர்மமாய்க் கொண்டனனே
(தினம் தினம்)

4. வண்ண வடிவழகன்

கண்ணின் மணியே ராமனே
வண்ண வடிவே ராமனே
விண்ணின் ஒளியே ராமனே
மண்ணின் வளமே ராமனே

முன்னைத் தவமே ராமனே
பண்ணின் லயமே ராமனே
அன்னை குணமே ராமனே
அன்பு என்னும் பண்பு நீதான் (கண்ணின் மணியே)

வேத முனிவர் வேள்விகாத்த தீர சூர ராமனே
காதல் நங்கை கரம் பிடித்த கல்யாண ராமனே
தந்தையின் சொல்லே மந்திரம் என்ற
தசரத ராமனே
வேடனும் விலங்கும் யாவரும் ஒன்றெனக்கூறும்
சமரச ராமனே (கண்ணின் மணியே)

சித்திரத் தாமரை ஒத்த முகத்தோய்
முத்திரைப் பசும் பொன் ராமனே
துக்கமும் சுகமும் பக்குவம் என்னும்
சித்தம் படைத்த ராமனே
அரக்கர் கூட்டம் அழித்தவா
அயோத்தி ராஜா ராமனே
யார் சொன்ன போதிலும் ஆட்சியில் நேர்மையை
காக்கும் கடமை வீரனே (கண்ணின் மணியே)

5. மீராவின் ராமன்

ராமபக்தி சாம்ராஜ்யம் எனக்கானதே
குருநாதரால் எனைச் சேர்ந்ததே

ராமபக்தி சாம்ராஜ்யம் எனக் கானதே
குருநாதரின் அருளாசியால் எனைச் சேர்ந்ததே

விலையே இல்லா புதையல் - அது
அழியா செல்வமே

குறையாதது மறையாதது நிலையானது (ராமபக்தி)

உடலாலும் உணர்வாலும் ஊட்டி வளர்த்தேன்
உள்ளத்தின் உள்ளே வைத்து தினம் பூஜித்தேன்
உலகம் முழுதும் தேடியே திரிந்தேன் - என்
பிறவி தோறும் மறவாமல் நாடி அலைந்தேன்
அடைந்தேன்உனை மகிழ்ந்தேன்இனி பயம் இல்லையே
(ராமபக்தி)

உண்மை என்ற ஓடம் வந்து என்னை மீட்டது
ஓடக் காரன் சொன்னஞானப் பாடல் கேட்டது
கண்ணன் பக்தர்கள் முன்னால் சூழ்ந்தனர் - இரு
கண்போல மீராவை கட்டிக் காத்தனர்
இனி நானவன் துணை யாகினேன் புகழ்பாடுவேன்
(ராமபக்தி)

க்ருஷ்ண ஹரி ஹரி கோவிந்தா
ஹரி ஹரி முராரி கோவிந்தா

6. ராமனின் வாழ்வு

தந்தையின் சொல்காத்த தசரத ராமா
சற்குரு தாள் பணிந்த நற்குண ராமா
சிவனவன் வில்லொடித்த சிங்கமே ராமா
சீதையை மணமுடித்த சிங்கார ராமா

(தந்தையின்)

வேடனும் நானும் சோதரன் என்றாய்
விலங்கும் அவ்வா றென்றாய்
யாவும் ஓர்குலம் ஓர்உயிர் என்றாய்
ஆன்ம நேயம் கொண்டாய்
அரக்கன் மேலும் இரக்கம் கொண்டாய்
அன்பே பண்பு என்றாய்

(தந்தையின்)

மணிமுடி மரவுரி இரண்டுமே எனக்கு
சரிசமம் தானென்றாய்
அரண்மனை ஆரண்யம் எதுவானா லென்ன
குணமே கொள்கை என்றாய்
மனிதனில் தெய்வம் வாழ்வதை உந்தன்
வாழ்வில் உணர்த்தி நின்றாய்

(தந்தையின்)

7. மழைமேனி

ரஸமான துந்தன் திருநாமம் - ஸ்ரீ
ரகுராமா எனும்போதே சுகமாகும்
(ரஸமான)

மழைமேனி மரகத ஒளி வீசும் - விழிக்
கருநீலம் காண்போர்க்கு கண் கூசும்
ஒருவார்த்தை ஒரு பாணம் ஒரு மனைவி - எனும்
ஒப்பற்ற குணசீலத் தேனருவி
(ரஸமான)

தடந்தோளில் வில்லேந்தி நடந்த நடை - அதைத்
தான் கண்டு ஜானகியின் மெலிந்த இடை
மடந்தையினைக் கைப்பிடித்தும் காவி உடை - நின்
வனவாஸம் பகை நாசம் வெற்றிக்குடை
(ரஸமான)

கருணைக்கு ஒரு சின்னம் கைவண்ணம் - ஒரு
கல்லுக்கும் வாழ்வு தரும் கால் வண்ணம்
தர்மத்தின் மறுபெயர் உன் சாம்ராஜ்யம் - நின்
தரிசனத்தால் கிடைப்பது தான் சௌபாக்யம்
(ரஸமான)

8. ராம மந்திரம்

ராம் ராம் ராம்
ராம் ராம் ராம்

ஸ்ரீ ராம் ஜெயராம் ஜெய ஜெய ராம் - என
நாளும் சொல்வார் துயரில ராம்
வேத வேதாந்தப் பொருளெல்லாம் - ரகு
ராமா என்பதில் அடங்கிடுமாம்

ராம் ராம் ராம் (ஸ்ரீ ராம்)

கோசலை பெற்ற குணக்குன்று
கொண்டது ஒன்றில்லை தனக்கென்று
ஆசா பாசம் அதைவென்று
அன்பால் தன்பால் அழைக்கின்றான்

ராம் ராம் ராம் (ஸ்ரீ ராம்)

வேடனும் விலங்கும் சோதரராய்
விபீஷணன் அறநெறி துணையதுவாய்
காடும் கடலும் கடந்து சென்றே
ஜானகி மானம் காத்தவனாம்

தந்தை சொல் தவறா தவசீலன்
தர்மத்தின் மறு உரு ஸ்ரீ ராமன்
ஜனகாதி முனிவர் போற்றியவன்
த்யாக ப்ரம்மத்தின் மூர்த்தியவன்

ராம் ராம் ராம் (ஸ்ரீ ராம்)

9. இருவிழி போதுமோ

இருவிழி போதுமோ ராமனைக் காண
மரகத மேனியின் அழகென்ன!
வார்த்தைகள் இல்லையே வாயாரப் பாடிட
ஏனோ அவன் பெயர் கேட்டதும் சிலிர்க்குதே!
(இரு விழி)

சந்திரன் ஒளியினை கண்களில் கண்டேன்
தந்தைசொல் மந்திரம் வாழ்க்கையில் கண்டேன்
சிந்தையில் சீதையே நின்றிடக் கண்டேன்
தீமையை வில்லால் வென்றிடக் கண்டேன்
(இரு விழி)

வேடனும் விலங்கும் பறவையும் எனது
ஸோதரர் என்றே சொன்னவன் அவனே
மாதவ முனிவரைக் காத்தன கைகள்
சாப விமோசனம் தந்தன கால்கள்
(இரு விழி)

ஆரண்யம் அயோத்தி இரண்டுமே சமமே
கோசலை கைகேயி இருவரும் சமமே
ராமனின் பார்வையில் யாவரும் சமமே
காருண்ய மூர்த்தியே நின்பதம் சரணம்
(இரு விழி)

10. சிரிப்பும் நெருப்பும்

சித்திரப்பூ மத்தாப்பு சிரிப்பு
தீங்கு செய்யும் மாந்தருக்கு நெருப்பு
ஒரு போதும் மாறாத நோக்கம்
வழி மாறிப் போனாலோ தாக்கும்
அஞ்சலென்று சொன்ன பின்பு அபயம்
என்றும் அவன் அன்பு உண்டு சரணம்

ஸ்ரீ ராமன் பாதாரமே - நம் வாழ்வுக்கு ஆதாரமே
(சித்திரப்பூ)

வாலிபப் பருவத்தில் வீரம் விளைத்தான்
காதலைப் போற்றி நின்றான்
சோதனை வந்தாலும் சுமைதாங்கிக் கொண்டான்
நாட்டுக்குத் தன்னைத் தந்தான்
நல்லது செய்கவே ஒன்றாய் வாழ்கவே
யாவரும் இங்கே சோதரர் தானே வாரீர் என்றான்

ஸ்ரீ ராமன் வாழ்க வாழ்க

யாகத்தில் தோன்றி வந்த அமுதான மேனி
அக்கரை சேர்க்கும் தோணி
யோகியர் உளக்கோயில் வாழ்கின்ற ஞானி
பேரின்ப ஊற்றுக் கோணி
இவனே அரசன் புனித புருஷன்
மானிட வடிவில் தோன்றிய கடவுள்
போற்றிச் சொல்வோம்

ஸ்ரீ ராமன் வாழ்க! வாழ்க!!

11. ஸ்ரீ ராம சரிதம்

இது வெறுங் கதையல்ல - ஒரு
வீரன் வாழ்ந்த வரலாறு - ஜெய
ராமன் ஆண்ட திந்நாடு - நம் இந்திய நாடு

பாடு புகழ் பாடு
ஸ்ரீ ராமன் பெருமை நாளும் நாளும்
போற்றிக் கொண்டாடு
ஸ்ரீ ராம் ஜெயராம் (இது வெறும் கதையல்ல)

கரியமேனி அழகன் இவனின் காவல் வேண்டினான்
அரக்கர் ஓய வேண்டினான் - அந்த
முனிவன் விஸ்வா மித்ரன்யாகம்
முடிக்கும் வரைக்கும் எடுத்த வில்லை
முடக்கவே இல்லை - பிடி - கொடுக்கவே இல்லை
கண் - படுக்கவே இல்லை - அந்த
இளைய வயதில் என்ன வீரம்
கடமை உணர்வு லட்சிய வேட்கை

இவனன்றோ வீரன்..... சூரன்
இந்த நாட்டுக் கேற்ற தீரன்

பாடு - புகழ்பாடு - ஸ்ரீராமன் பெருமை நாளும் நாளும்
போற்றிக் கொண்டாடு
ஸ்ரீ ராம் ஜெயராம் (இது வெறும் கதையல்ல)

சிவனின் தனுசை முறித்த பெருமை இவனையே சேரும்
பரசு ராமனும் சோரும் - அந்த
சீதை காதல் சேவை கண்டு
வாழ்வு முழுதும் தாரம் ஒன்று

மாறினா னில்லை - பல் - சோதனை தொல்லை
உடன் வாழ்வும் இல்லை - தன்
நாடுகாக்க வீடும் துறந்து
ஆட்சி செய்த அரிய வேந்தன்
இவனன்றோ த்யாகி - யோஹி
இந்த நாட்டின் நல் விவேகி
பாடு புகழ்பாடு ஸ்ரீராமன் பெருமை நாளும் நாளும்
போற்றிக் கொண்டாடு
ஸ்ரீ ராம் ஜெய்ராம்

தன்னுடன் பிறந்த தம்பிய ரோடு
குகனையும் சேர்த்தான் - பின்பு
சுக்ரீவன் சேர்ந்தான் - கொடும்
ராவணன் தம்பி வீடணன் அவனும்
வாழ்க என்று தோள் தழுவினன்
பறவையும் விலங்கும் அன்பு உறவு கொண்டாடும்
உடன் பணிகளும் புரியும்
அறப் போரில் வெற்றி வாகை சூடி
மக்கள் போற்ற வாழ்ந்த மன்னன்
இலனன்றோ தலைவன் - அறிஞன்
மனித உருவில் வந்த தெய்வம்
பாடு புகழ்பாடு ஸ்ரீராமன் பெருமை நாளும் நாளும்
போற்றிக் கொண்டாடு
ஸ்ரீ ராம்.... ஜெய் ராம்

12. சேவை செய்வோம்

உந்தன் திருக்கோயில் சேவை செய்வோம்
தேசத்தின் தொண்டு என்போம்
மறக்காமல் ராம நாமம் சொல்லுவோமே
அயோத்தி ராமனுக்கு நமஸ்காரமே
ஸ்ரீ ராம் ஜெயராம் / ஜெய் ஜெய் ராம்

நாராயணனின் அவதாரம்
சூரிய வம்ஸ ஒளிதீபம்
பூமி வாழ தேடி வந்த புருஷோத்தமா
ராம ராஜ்யம் நாட்டிச் சென்ற ரகோத்தமா
தீமை எங்கு தெரிந்தாலும் தீ மூட்டினாய்
நாளும் மக்கள் நலம் காண வழி காட்டினாய்
ராம ராஜ்யம் நாட்டிச் சென்ற ரகோத்தமா
ஜெய் ஜெய் ராம் / ஜெய் ஜெய் ராம்

ராம நாமம் தாரக மந்த்ரம்
வீடும் நாடும் முன்னேறும்
எல்லா உயிரும் போற்றும் செல்வா அன்பு ராகவா
மனித உருவில் வந்த தெய்வம் நீ அல்லவா
பேதம் இன்றி நீதி காத்த ஸ்ரீ ராமனே
வேத வாழ்வின் இலக்கணம் நீ வெற்றி வீரனே
நாளைய உலகம் உந்தன் வழியில் நடைபோடுமே
ஜெய் ஜெய் ராம் / ஜெய் ஜெய் ராம்

13. ஸ்ரீ ராம் ஜெய் ராம்

சொல்லுங்கள்
ராம நாமம் தீரும் பாவம் சேரும் யோகம் லோக க்ஷேமம்
சகல மங்களம் சௌபாக்யம் (சொல்லுங்கள்)

ஸ்ரீராம்.... ஜெயராம்.... ஜெயராம் - ஜெயராம் / ஜெயராம்

எல்லோர்க்கும் உகந்த எளிதான மந்த்ரம்.... ராம்....
எப்போதும் தப்பாது காப்பாற்றும் கவசம்.... ராம்....
நல்லாரை சபையின் நடுவிலே வைக்கும்
பொல்லாரை மன்னித்து புகலிடம் காட்டும்
ஸ்ரீ ராம் ஜெய்ராம் ஜெயராம் ஜெயராம் ஜெயராம்
(சொல்லுங்கள்)

வால்மீகி வேடன் யோகியாய் ஆனான்
ஆஞ்ச நேயன் சிரஞ்சீவி ஆனான்
பார்வதி கேட்க பரமன் சொன்னான்
ஸ்ரீ ராம ஜெயமே சிறந்தது என்றே

ராம் ராம் ராம் ராம் ராம் ராம்......

ஸ்ரீ ராம ராம ராமேதி ரமே ராமே மனோரமே
ஸகஸ்ரராம தத்துல்யம் ராம ராம வரானனே

14. நேர்மையின் உரு

ஓம் ஸ்ரீராம் ஜெய ஜெய ராம்
ஜெய ரவிகுல தசரத ராம்
பாரத பூமியின் தேவா
நேர்மையின் திரு உருவே - ஓம்
ஸ்ரீ ராம் ஜெய ஜெய ராம் (ஓம் ஸ்ரீராம்)

சாந்தமும் வீரமும் இணைந்தது
ராமா உன்னிடமே - உன்
மறுபெயர் கண்ணியமே
கோதண்டம் ஏந்தியும் உன்முகம்
சாதுவின் நிர் மலமே - அது
சத்திய தரிசன மே (ஓம் ஸ்ரீராம்)

தாடகை வருவினில் பெண்ணவள்
மார்பினில் அம்பெய்தாய் - அவள்
மமதையை நீ கொன்றாய்
பேதை அகலிகை வாழவே
கல்லுக்கும் உயிர் தந்தாய் - உன்
காலிலும் கருணை வைத்தாய் (ஓம் ஸ்ரீராம்)

கோசலை வயிற்றினில் பிறந்தும் நீ
கைகேயி தாய் என்றாய் - அவள்
சொல்லுக்குத் தலை குனிந்தாய்
தூயவன் பரதன் ஆள்கென
காட்டுக்கு நீ சென்றாய் - அது
நாட்டுக்கு நன்மை என்றாய் (ஓம் ஸ்ரீராம்)

ஆருயிர் ஜானகி அவளையும்

தீயினில் விழச் சொன்னாய் - வனம்

ஏகென ஆணையிட்டாய்

ராமனின் ராஜ்யம் ஆயினும் / மக்களே தலைவர் என்றாய் - எந்த

துக்கமும் இல்லை என்றாய் (ஓம் ஸ்ரீராம்)



15. அவன் போல் யார்?

ஸ்ரீ....

ராமன் போல வேறு யாரும் வாழ்ந்தது இல்லை - அவன்
பேரைச் சொல்ல சொல்லச் சொல்ல
குறை ஏதும் இல்லை - நல்ல
குணங்களின் எல்லை
இனிமையின் தூதன் - அவன்
மனிதரில் தேவன்
ஸ்ரீராம் ஸ்ரீராம் ஸ்ரீராம் ஸ்ரீராம் (ஸ்ரீ ராமன் போல)

கோசலையின் மகனென்றாலும் கைகேயி செல்லம்
கைகேயியே மாறினாலும் மாறாத உள்ளம்
நாடு காடு எது என்றாலும் ஏற்கின்ற பண்பு
வேடன், விலங்கு, பறவை எதற்கும் சரிநிகர் அன்பு
ஸ்ரீராம் ஸ்ரீராம் ஸ்ரீராம் ஸ்ரீராம் (ஸ்ரீ ராமன் போல)

தனக்கு வந்த தீமை எதையும் தாங்கிடும் ஈரம்
பிறர்க்குத் தீமை என்ற போது புலப்படும் வீரம்
அரக்கன் தம்பி எனினும் கனிவு அறத்திற்கு அபயம்
அரசு காக்க குடும்ப வாழ்வும் துறந்திடும் த்யாகம்
ஸ்ரீராம் ஸ்ரீராம் ஸ்ரீராம் ஸ்ரீராம் (ஸ்ரீ ராமன் போல)

எடுத்த வில்லில் தொடுக்கும் பாணம் ஒன்றே ஒன்று
இல்லம் ஒன்று சொல்லும் ஒன்று ராமா.... என்று
அடுத்தவர்க்கு கொடுப்பதற்கு தன்னையும் தந்து
சிரித்திருக்கும் முகம் கொண்டோர் யார் தான் உண்டு
ஸ்ரீராம் ஸ்ரீராம் ஸ்ரீராம் ஸ்ரீராம் (ஸ்ரீ ராமன் போல)

16. ஸ்ரீ ராம சரிதம்

விருத்தம் :

விதியின் சுழலில் மனிதப் பண்புகள்
விலகி விடாமல் துயர்களை ஏற்றான்
மணிமுடி மன்னன் மரவுரி தரித்தான்
அரக்கரை அழிக்க அவன் அவ தரித்தான்

ஸ்ரீராம் ஜெயராம் ஜெயஜெய ஜெயராம்.....

பாடல் :

ஸ்ரீராம சரிதம் புனிதத்தின் புனிதம்
மானிட வடிவில் வந்தது தெய்வம்
ஸ்ரீராம் ஜெய ராம் ஜெய ஜெய ஜெயராம் (ஸ்ரீராம சரிதம்)

மாரி வறண்டது மாதரும் வறண்டார்
வேள்வியில் பாயஸம் தேவ அமுதம்
கோசலை செய்த பூர்வ புண்ணியம்
சூரிய குலமது தொடரும் வளரும்
ஸ்ரீராம் ஜெய ராம் ஜெய ஜெய ஜெயராம் (ஸ்ரீராம சரிதம்)

உயிரனுக் குயிராம் ராமனை என்னுடன்
அனுப்புக எனறான் விஸ்வா மித்ரன்
விழியைப் பெற்றவன் மீண்டும் இழந்தான்
தசரதன் புத்திர சோகத்தில் மிதந்தான் (ஸ்ரீராம சரிதம்)

கொடிய தாரகை தரையினில் வீழ்ந்தாள்
கல்லான அகலிகை கனிந்தே எழுந்தாள்
வில்லை முறித்தான் சீதைகைப் பிடித்தான்
வீரமும் காதலும் விளையாட்டு என்றான்
ஸ்ரீராம் ஜெய ராம் ஜெய ஜெய ஜெயராம்

பரசு ராமரும் பணிந்தே அகன்றார்
பட்டாபி ஷேகம் நல்ல நாள் குறித்தார்
மந்த்ரை சூழ்ச்சி கைகேயி தடுத்தாள்
தந்தை சொல் மந்திரம் மரவுரி தரித்தான்

ராமன் எங்கே அயோத்தி அங்கே
ஜானகி யோடு கானகம் சென்றான்
வேடனும் தம்பி வானரர் தம்பி
யாவரும் சோதரர் என்றே உரைத்தான்
ஸ்ரீராம் ஜெய ராம் ஜெய ஜெய ஜெயராம்

கங்கையைக் கடந்து சித்திர கூடம்
தங்கிய போது வஞ்சகி வந்தாள்
சூர்ப்ப னகை அவள் மூக்கறு பட்டாள்
எதிர்த்த அரக்கர் யாவரும் வீழ்ந்தார்

மாயமான் கண்டு மயங்கினாள் மாது
நீயும் போஎன்றாள் லக்ஷ்மணன் போனான்
ராவணன் கபட நாடகம் பாவம்
சீதையின் வாழ்வு முழுவதும் சோகம்
ஸ்ரீராம் ஜெய ராம் ஜெய ஜெய ஜெயராம்

ஜடாயு மோட்சம் வாலி அதம் வதம்
சுக்ரீவன் நேசம் அநுமன் விஸ் வாஸம்
லங்கா தகனம் விபீஷண சரணம்
யுத்தம் ஜெயம் அயோத்தி விஜயம்

அவச் சொல் நீங்க அவள் வன வாஸம்
அன்னையைக் காக்க பிள்ளைகள் வீரம்
லவகுசர் பாடும் அமுத கானம்
ராமச் சந்திரன் வைகுந்தக் கோலம்
ஸ்ரீராம் ஜெய ராம் ஜெய ஜெய ஜெயராம்

(ஸ்ரீராம சரிதம்)

17. பட்டாபிஷேகம்

கற்பக விருக்ஷ நிழலிலே ஒரு தங்க மண்டபம் ஸ்தாபிதம்
ரத்ன புஷ்பக ஆஸனம் ஸ்ரீ ராமச்சந்த்ரன் வீராசனம்
பத்தினி ஜானகி இடப்புறம் லக்ஷ்மணன் சத்ருக்னன் இருபுறம்
பரதன் வெண்குடை பிடிக்கவே பட்டாபிஷேகம் அற்புதம்

(கற்பக)

சுக்ரீவன் விபீஷணன் அங்கதன் சுற்றியும் நின்று வாழ்த்தவே
பக்தியின் இமயம் ஹநுமனும் பத்மபாதம் தாங்கவே
திக்குகள் எட்டும் தேவர்கள் புஷ்பமாரி பொழியவே
உத்தமன் ரகுகுல நாயகன் பட்டாபிஷேகம் அற்புதம்

(கற்பக)

மங்கள வாத்யம் முழங்கவே மறையோர் ஆசி வழங்கவே
சிந்துரத் திலக மங்கையர் தேனிசை கீதம் பாடவே
இந்திர நீலமேனியான் செந்தா மரைமுகம் மலரவே
சுந்தரக் கோலம் காட்டிடும் பட்டாபிஷேகம் அற்புதம்

(கற்பக)

ஸ்ரீ ராமச் சந்தரனுக்கு ஜெய மங்களம்
வைதேகி காந்தனுக்கு சுப மங்களம்
அயோத்தி வீரனுக்கு ஜெய மங்களம்
ராஜா ராமனுக்கு சுப மங்களம்
ஜெய மங்களம் நித்ய சுப மங்களம்
ஜெய மங்களம் நித்ய சுப மங்களம்

18. பட்டாபிஷேகம்

கோடி மன்மதர் லாவண்யம் - ஸ்ரீ
ராமச் சந்த்ரன் ஸௌந்தர்யம்
லோஹ மாதா ஜானகி - அந்த
தர்ம பத்தினி இடப்புறம்

கற்பக விருட்ச நிழலிலே - ஒரு
தங்க மண்டபம் அதனிலே
ரத்ன ஸிம்மா ஸனத்திலே - அவன்
பட்டாபி ஷேகம் நடக்குதே (கோடி மன்மதர்)

தங்கத் தம்பி லக்ஷ்மணன்
வெண் கொற்றக் குடை பிடிக்கவே
சத் ருக்கனன் பரதனும்
வெண் கவரிகள் விசிறவே
சுக்ரீவன் விபீஷணன்
தொழுது போற்றி வணங்கவே
பக்தியின் சிகரம் ஹநுமனும்
பத்ம பாதம் தாங்கவே (கோடி மன்மதர்)

வேத முனிவர் வஸிஷ்ட்ரும்
ராஜ மகுடம் சூட்டவே
தேவர் பூமழை பொழியவே
தாயர் வாழ்த்து கூறவே
சாம கானம் ஒலிக்கவே
ஏழு உலகமும் களிக்கவே
ராம ராஜ்யம் செழிக்கவே
நன்மை யாவும் கொழிக்கவே

பூமி உள்ள நாள் வரை
ராமன் புகழும் வாழுமே
ராம நாமம் தாரகம்
சாந்தி தந்திடும் மந்திரம்
தீமை யாவும் விலகுமே
நேர்மை என்றும் நிலவுமே
ராமன் பாதம் சரணமே
சரணம் சரணம் சரணமே

ஸ்ரீராமச் சந்தரனுக்கு ஜெய மங்களம்
வைதேகி காந்தனுக்கு சுப மங்களம்
பட்டாபி ராமனுக்கு ஜெய மங்களம்
பாராளும் வேந்தனுக்கு சுப மங்களம்

ஜெய மங்களம் நித்ய சுப மங்களம்

19. ஜெயம் நிச்சயம்

ஸ்ரீ..... ராம என்றாலே ஜெயம் நிச்சயம்
வாழ்வின் அநுபவம் வார்த்தை சத்தியம்
ஞானியர் நாவினிலே வேத மந்திரம்
தாரகம் வேண்டிடும் யாவும் தந்திடும்

ஸ்ரீ.... ராம ராம
ராம ராம (ஸ்ரீ.... ராம)

மராமரா என்ற போதும் ராமன் வந்தனன்
வால்மீகி வேடனுக்கும் வாழ்வு தந்தனன்
சபரிஎச்சில் கனி சுவைத்து மோட்சம் ஈந்தனன்
பகைவன் தம்பி சிரஞ்சீவி பட்டம் ஏந்தினன்

ஸ்ரீ.... ராம ராம
ராம ராம (ஸ்ரீ.... ராம)

சிவபிரான் தேர்ந்தது ராம நாமமே
சிறையிலும் பதிவது ராமர் பாதமே
ஹநுமனை அழைப்பது ராம நாமமே
ஆபத்தில் காப்பது ராமர் பாதமே

ஸ்ரீ.... ராம ராம
ராம ராம (ஸ்ரீ.... ராம)

20. ரதயாத்திரை

ஜெய் ஜெய் ராம் ..... ஜெய் ஜெய் ராம் .....!

ரகு வீரனின்..... ரத யாத்திரை.....
மணி ஓசை நாதம் கேட்குதே
புது ராகம் தாளம் ஞான யாகமே.....!
ஆனந்தத் தேரோட்டமே
இனியொரு தடையிலை இடரிலை பயமிலை
நவயுகம் பிறந்த தடா
வருகிற தலைமுறை அணியதன் ஒளிச்சுடர்
விழிகளில் மலர்ந்ததடா (ரகு வீரனின்)

ஸ்ரீ ராமன் திருக்கோலம் புலர் காலை பூபாளம்
ஜெய தேவன் கோதண்டம் பகைவர்க்கு பூகம்பம்
சீதையின் வனவாசம் ராவணனின் குலநாசம்
ஜகந் நாதன் அவதாரம் தீமைக்குப் பரிகாரம்
வேத சாரம் ராம நாமம் ஜீவமந்த்ரம் அதுவே (ரகு வீரனின்)

வரலாறு காணாத தனிக்காட்சி அவனாட்சி
வஞ்சகம் பொய் சூது கொஞ்சமும் அங்கேது
தர்மங்கள் நியாயங்கள் தவறாது பிறழாது
தன்னலம் இல்லாத சமுதாயப் பண்பாடு
ராம ராஜ்யம் மீண்டும் தோன்றும் இனிய வசந்த காலம்
(ரகு வீரனின்)

21. கோதண்டபாணி

கார்மேகம் விளையாடும் மலைச்சாரலோ
ஜானகி தலை சாய்க்கும் பூஞ்சோலையோ
தோள் கண்டார் வேறேதும் காணாமல் மெய்மறந்தார்
வீரத்தில் உனக்கீடு யார்தான் ஐயா
கோதண்ட பாணியே ராமச் சந்த்ரா (கார்மேகம்)

மாவீரனாம்......
வாலியையும்......
போராடி வெல்லுகின்ற சூழ்ச்சி சொன்னாய்
ஏழுமரம்......
ஓர் அம்பிலே......
ஊடுருவிச் செல்லுகின்ற வில்லை எய்தாய்
கையில் எடுத்ததும் தொடுத்ததும் விடுத்ததும் முடித்திடும் வில்லாற்றலே
என்றும் ஒருமுறை ஓரம்பு மறுமுறை என்பது உனக்கில்லையே
இதுவரை உனக்கினை எவருமே வரவிலை தனித்தன்மையே (கார்மேகம்)

ராவணனும் ஏமாந்தான்
நேரிலே கண்டதுமே நெஞ்சம் ஒடிந்தான்
நாளை நீ வா என்றதுமே
ஆலையில் கரும்பானான் அகந்தை அழிந்தான்
உன் விழிகளின் கருணையும் மனதினை மாற்றிடும் அருள் வேகமே
உன் பகைவர்கள் மணிமுடி பொடிபடும் ஒருநொடி தனி வீரமே
மலரடி பணிபவர் மனக்குறை அகன்றிடும் உன் இரக்கமே

22. நடையில் உயர் நாயகன்

அழகின் உறைவிடம்
ஆற்றலின் வடிவம்
இக்ஷ்வாகு வம்சம்
ஈகையின் அம்சம்
உயர்குணப் பண்பு
ஊற்றாகும் அன்பு
எல்லாம் அறிந்தவன்
ஏணியாய் இருந்தான்

ஐயமே இல்லான்
அப்படி நடிப்பான்
ஒற்றுமை காக்கவே
ஓர்குலம் என்பான்

அடங்கா தவர்க்கும்
ஔஷத மானான்
ஆயுதம் ஏந்தியும்
அமைதியைக் காத்தான்

வலியோர்க் கெல்லாம் வல்லினம் ஆனான்
எளியோர்க் கெல்லாம் மெல்லினம் ஆனான்
இடையினம் போலே இளகிய மனத்தான்
நடையில் உயர்ந்தான் நெஞ்சினில் நிறைந்தான்

ராம் சீதாராம் ராம் ஜெய் ஜெய் ராம்

வீரமாருதி

23. பலம் தருக

நலத்தைக் கொடுத்திடு பலத்தைக் கொடுத்திடு
பாதத்தைக் காட்டிடு ஹநுமானே
அறிவைக் கொடுத்திடு அருளைக் கொடுத்திடு
பகையை விரட்டிடு ஹநுமானே

ஜெய ஜெய ஹநுமானே
ஜெய ஜெய ஹநுமானே
ஜெய ஜெய ஹநுமானே
ஜெய் ஜெய் ஹநுமானே

மூன்று உலகிலும் யாருனக் கீடு
முற்றும் துறந்த ஹநுமானே
முக்கண் ஈசன் சக்தியைப் பெற்றாய்
அற்புதம் கோடி ஹநுமானே

ஜெய ஜெய ஹநுமானே
ஜெய ஜெய ஹநுமானே
ஜெய ஜெய ஹநுமானே
ஜெய ஜெய ஹநுமானே

பயத்தை நீக்கிடு பாவத்தைப் போக்கிடு
பார்வை காட்டிடு யநுமானே
பவன சுதனே ராம தூதனே
பக்த வத்ஸலா ஹநுமானே

ஜெய ஜெய ஹநுமானே
ஜெய ஜெய ஹநுமானே
ஜெய ஜெய ஹநுமானே
ஜெய ஜெய ஹநுமானே

பொன்னிற மேனி சுருள்முடி அழகு
கண்ணைக் கவருது ஹநுமானே
மகர குண்டலம் மணி அணி ஆரம்
கதையை ஏந்தும் ஹநுமானே

ஜெய ஜெய ஹநுமானே
ஜெய ஜெய ஹநுமானே
ஜெய ஜெய ஹநுமானே
ஜெய ஜெய ஹநுமானே

காவி உடையும் ராஜ நடையும்
சேர்ந்து ஜொலிக்கும் ஹநுமானே
இடியும் கொடியும் கையில் தோன்றும்
அதிர்ஷ்ட ரேகை ஹநுமானே

ஜெய ஜெய ஹநுமானே
ஜெய ஜெய ஹநுமானே
ஜெய ஜெய ஹநுமானே
ஜெய ஜெய ஹநுமானே

அருகம் புல் பூணூல் வெற்றிலைப் பட்டி
துளசிப் பிரியா ஹநுமானே
வாயு வேகம் மனோ வேகம்
ஆகாயம் தாண்டும் ஹநுமானே

ஜெய ஜெய ஹநுமானே
ஜெய ஜெய ஹநுமானே
ஜெய ஜெய ஹநுமானே
ஜெய ஜெய ஹநுமானே

24. ஹநுமத் பஞ்சரத்னம்

ஸ்ரீ ராமா என்றதும்
ஆனந்தக் கண்ணீர்
அரும்பிட மெய் சிலிர்ப்பான்
ஞானமும் செல்வமும்
இரண்டையும் அருளி
வானத்தைக் காட்டிடுவான் - நல்
வளங்கள் கூட்டிடுவான்

ஜெய ஜெய ஜெய ஹநுமான் - ஜெய்
ஜெய ஜெய ஜெய ஹநுமான்
ஜெய ஜெய ஜெய ஹநுமான்

ஆயிரம் கோடி சூரிய ஒளிச்சுடர்
அநுமனின் திரு முகமே
அலைகடல் போலே அவனின் விழிகளில்
கருணை பொங்கிடுமே
மூச்சை அடக்கி பேச்சைச் சுருக்கென
வாய்மலர் பொத்திடுவான்
முன்னேறு முன்னேறு என சைகை காட்டி
வாலை சுழற்றிடுவான் - நம்
வாழ்வை உயர்த்திடுவான்

ஜெய ஜெய ஜெய ஹநுமான் - ஜெய்
ஜெய ஜெய ஜெய ஹநுமான் - ஜெய்
ஜெய ஜெய ஜெய ஹநுமான்

காமனை வென்றவன் சஞ்சீவி ராயன் ஜானகி துயர்துடைத்தான்
ராம நாமமே தோணியாய்க் கொண்டு பவக்கடல் அதைக் கடந்தான்
வானர சூரன் வாயுகுமாரன் அஞ்சனை தவப்பு தல்வன்
ராக வேந்திரர் பூஜையில் இருப்பவன் அர்ஜுனன் கொடி அமர்வான்
- பேர் ஆபத்தில் காத்திடுவான்

ஜெய ஜெய ஜெய ஹநுமான் - ஜெய்
ஜெய ஜெய ஜெய ஹநுமான்
ஜெய ஜெய ஜெய ஹநுமான் (ஸ்ரீராமா)

25. அசோக் நகர் ஸ்ரீ ஆஞ்சநேயர்

கண்டேன் சீதையை என்றதும் ராமனின்
கவலைகள் பறந்தனவே - அநுமன்
சென்றதும் வந்ததும் செயற்கரும் செயல்கள்
வெற்றி விளைத்ததுவே - இலங்கையை
சுற்றி வளைத்ததுவே (கண்டேன்)

என்றும் சிரஞ்சீவியாய் இரு என்றாள் ஜானகி - அவன்
இன்றும் இருக்கின்றான் - அவன் இன்றும் இருக்கின்றான்
அன்று அசோக வனத்தில் அவளின் சோகம்
அகற்றிட அவன் வந்தான் - விஸ்வ
ரூபம் காட்டி நின்றான் (கண்டேன்)

சென்னை அசோக் நகரில் சிங்காரக் கூடத்தில் நின்று
திருவருள் புரிகின்றான் - திருவருள் புரிகின்றான்
தேடி வருவோர்க்கு நாடியதைத் தந்து
ஜெயம் ஜெயம் என்கின்றான்
அன்னாசிப் பழங்கள் ஆயிரம் லட்டுகள்
வடைமாலை சூடுகின்றான்
ஆரவார மின்றி அமைதியாய் ராமனை
ஆராதனை செய்கின்றான்

ராம தூதனை காணச் செல்லுவோம் வாரீர்
அருட் ப்ரவாஹம் அதனில் நீந்துவோம் வாரீர்
வாயு புத்ரனின் தாள் பணிந்திடுவோம் வாரீர்
வாட்டம் போக்குவான் மகிமை பாடுவோம் வாரீர்
வாரீர் வாரீர்

ஜெய ஜெய ஜெய ஹநுமான் - ஜெய்
ஜெய ஜெய ஜெய ஹநுமான்

26. ஸ்ரீ ஆஞ்ச நேயனின் பலம்

அஞ்சா நெஞ்சம் தரும் - ஸ்ரீ
ஆஞ்ச நேயனின் பலம்
அஞ்சனை குமரா அபயம் - எனின்
அல்லல் அகலும்
செல்வம் பெருகும் (அஞ்சா நெஞ்சம்)

துன்பத்தால் துவண்டு நிலைதளர்ந்த ஜானகியின்
நெஞ்சத்தில் நம்பிக்கை விதை தூவினான்
ஹநுமன் கடல்மேல் தாவினான்
கண்டேன் சீதையை என்றான் ராமனும்
கவலையால் குனிந்த தலை நிமிர்ந்தான்
கையில் வில்லை ஏந்தினான்
கதிரோன் ஆசியை வேண்டினான் - சீதை
கற்பைக் காக்க முந்தினான் (அஞ்சா நெஞ்சம்)

இடுக்கண் வந்தபோதெலாம் இவன் சிரித்தான்
எழுந்தான் பறந்தான் மலையையும் கொணர்ந்தான்
கணக்கில் அடங்குமோ இவன் செய்த த்யாகம்
நினைத்தால் அநுகூலம் துதித்தால் வைபோஹம்
மங்களம் தரும் சுந்தரவதனன்
மாருதி - ஜெய - மாருதி
அஞ்சனை மைந்தன் கல்யாண குண
வாரிதி - சுக - வாரிதி
மாருதி - ஜெய - மாருதி (அஞ்சா நெஞ்சம்)

27. பஞ்சமுக ஆஞ்சநேயர்

கத்தி கேடயம் புஸ்தகம்
அம்ருத கலசம் அங்குசம்
மலை கலப்பை கட்வாங்கம்
மரம் பாம்பு ஆயுதம்
பஞ்சமுகி ஹநுமத் ப்ரபாவம்
அன்பும் அருளும் ப்ரவாஹம்

தெற்கு முகம் நரஸிம் ஹம்
ஓடும் பூதம் பிசாசம்
வடக்கு முகம் வராஹம்
சேரும் சகல ஐஸ்வர்யம்
மேற்கு முகம் மஹாகருடம்
தீரும் விஷம் ஜ்வரம் ரோஹம்
மேல் முகம் ஹயக்ரீவம்
கூடும் வாக்கு வசீகரணம்
பஞ்சமுகி ஹநுமத் ப்ரபாவம்
அன்பும் அருளும் ப்ரவாஹம்

கிழக்கு முகம் அவள் முகம்
வழக்கு பகைநீங்கி ஜயம்
தொடுக்கும் கரங்கள் பத்தாகும்
தோஷம் துயரம் விடுபடும்
அபஸ்மாரம் கடன் அகலும்
ஆயுள் அறிவு பொருள் வளரும்
ஹநுமன் நாமம் எந்நாளும்
ஆபத் ஸகாயம் ஆனந்தம்
பஞ்சமுகி ஹநுமத் ப்ரபாவம்
அன்பும் அருளும் ப்ரவாஹம்

28. வராமல் இருப்பாரா

வராமல் இருப்பாரா - அருள்
தராமல் இருப்பாரா
வாயு குமாரர் அந்த வானர வீரர்
வருக என்றே நாம் உருகி நின்றால்
(வராமல்)

ராமாயணம் என்னும் காவிய நாயகன்
ஸ்ரீ ராமச் சந்த்ரனின் மானத்தைக் காத்தவர்
ஜானகி மாதாவின் கண்ணீர் துடைத்தவர்
சத்தியம் காக்கவே வாழ்ந்திடும் உத்தமர்
(வராமல்)

புலன்களை அடக்கிய புண்ணியர் கண்ணியர்
நலன்களை வாரி வழங்கிடும் நல்லவர்
அறிவுச் சுடர் அவர் அருள்நில வானவர்
அஞ்சனை மனம் மகிழ் ஆஞ்ச நேயர் அவர்
(வராமல்)

அரக்கத் தனத்திற்கு அக்கினி போன்றவர்
அஞ்ஞானம் நீக்கிடும் மெய்ஞ்ஞான குரு அவர்
உறக்கத்திலும் நம்முடன் விழிப்பாய் இருப்பவர்
ஒருக்காலும் மறக்காது விருப்புடன் காப்பவர்
(வராமல்)

29. சித்தி தரும் சிரஞ்சீவி

அஷ்டமா...... சித்திகள்
நவநிதிகள்
துஷ்டரை...... துரத்திடும்
மஹாசக்திகள்
எட்டுத்திக்கும் போற்றும்
வித்தை கலைகள்
அத்தனை யும்தரும்
பொற் கரங்கள்

அநுமனை நினைத்ததும் ஜெயமங்களம்
அநுக்ரஹம் ஆச்சர்யம் உடன்பலிதம்
(அஷ்டமா சித்திகள்)

ராமனின் தாசனாய் இருந்து கொண்டே
அகிலத்தின் அரசனாய் அவன் ஜொலிப்பான்
சீதைக்கு சேவைகளைச் செய்து கொண்டே
ஜகமெலாம் வலம் வந்து செழிக்கச் செய்வான்
அநுமனை நினைத்ததும் ஜெய மங்களம்
இதயத்தில் என்றென்றும் அவன் நர்த்தனம்
(அஷ்டமா சித்திகள்)

சூரியர் கோடியோ முகமண்டலம்
ஆனந்த வெள்ளமோ அவன் தரிசனம்
சோளிங்க புரத்திலே யோகபாவம்
சாந்தம் சதுர்புஜம் சங்குசக்ரம்
அநுமனை நினைத்ததும் ஜெயமங்களம்
மோக்ஷமும் அவன் தரும் சுபமங்களம்
ஜெய மங்களம் சுபமங்களம்

30. ஆவேசகர்ஜனை

ஹநுமானே நீ எழுந்து
ஒரு முறை வாய்மலர்ந்து
ஆவேச கர்ஜனை செய்தால்
எமனுக்கும் அச்சம் வரும்
சகல லோகமும் நடு நடுங்கும்
பேய் பூதம் தூர ஓடும்
ஜெய் ஹநுமான் ஜெய் ஹநுமான்
ஜெய் ஹநுமான் ஜெய் ஹநுமான் (ஹநுமானே)

கணையாழி தனைக்காட்டி
ஜானகிக்கு உயிரூட்டி
ராமபிரான் நெஞ்சில் நிறைந்தாய்
அயோத்தியில் அவனுடைய
பட்டாபி ஷேகம் கண்டு
மனம் மகிழ்ந்து உருகி நின்றாய்
ஜெய் ஹநுமான் ஜெய் ஹநுமான்
ஜெய் ஹநுமான் ஜெய் ஹநுமான் (ஹநுமானே)

ரகுவீரன் மாளிகையில்
காவலாய் நீ இருப்பாய்
எங்களுக்கும் துணை நீ தான்
நிரந்தரமாய் உன் நாமம்
ஜபிப்பவர்கள் வாழ்வினிலே
சுகங்களெலாம் வழங்கு கின்றாய்
ஜெய் ஹநுமான் ஜெய் ஹநுமான்
ஜெய் ஹநுமான் ஜெய் ஹநுமான் (ஹநுமானே)

31. வெற்றித் தெய்வம்

ராமதூத மஹாதீர ருத்ரவீர்ய ஸமுத்பவ
அஞ்சனா கர்ப்பஸம்பூத வாயுபுத்ர நமோஸ்துதே

நீ இருக்கும் இடத்தில் ஒலிக்கும் கீதம்
ஏழிசை நாதம்
உன் இனிய காட்சி அருளின் மாட்சி
வெற்றியின் ஏற்றம்
விவேகத்தின் தோற்றம்

ஜெய ஜெய ஹநுமான்
ஜெய ஜெய ஹநுமான் (நீ இருக்கும்)

துளசி தாசர் ராம சரிதம் நின் உப தேசம்
பீமன் வேண்ட அர்ஜீனன் கொடியில் உன் சுயரூபம்
நீ பாடிய ராகம் அடக்கும் நாரதன் கர்வம்
கீதை கேட்டு விளக்கம் தந்த ஞான சாகரம் பண்டித ரத்னம்

ஜெய ஜெய ஹநுமான்
ஜெய ஜெய ஹநுமான் (நீ இருக்கும்)

பஞ்ச பூதம் பஞ்சேந் திரியம் வென்றதோர் வீரம்
பலன் கருதா சேவை செய்யும் குணம் கொண்ட சீலம்
வஜ்ர தேகம் மேனி முழுதும் மணக்கும் செந்தூரம்
பாரி ஜாத வனத்தில் த்யானம் பரம பவித்ரம் ராம மந்திரம்

ஜெய ஜெய ஹநுமான்
ஜெய ஜெய ஹநுமான் (நீ இருக்கும்)

32. மாருதி கவசம்

வீணை மீட்டும் ஆஞ்ச நேயன் விழிகளைக் காக்க
வீர மாருதி நேரில் வந்தென் சிரசினைக் காக்க
ஞான சாகர தேவ தேவன் நாசியைக் காக்க
ராம தூதன் நாளும் எனது நாவினைக் காக்க

பல்லும் இதழும் பழுது படாமல் வல்லவன் காக்க
நல்ல சொற்களைக் கேட்க வைத்து செவிகளைக் காக்க
கன்னம் இரண்டும் கதிரின் சீடன் திண்ணமாய்க் காக்க
கழுத்தும் தோளும் அழுத்த மாக காத்து ரக்ஷிக்க

சேவை செய்யும் திருக்க ரங்கள் கைகளைக் காக்க
மா மலையினை தாங்கி வந்தான் மார்பினைக் காக்க
வாயு புத்ரன் பார்வை எந்தன் வயிற்றினைக் காக்க
ஏழு உலகிலும் என்றும் இருப்பான் இடையினைக் காக்க

படையும் நடுங்கும் நடைகள் கொண்டான் தொடைகளைக் காக்க
கணுக்கால் முழந்தாள் தளர்ந்தி டாமல் கருணையோன் காக்க
குறியும் குதமும் நெறியில் நிற்க மறையவன் காக்க
குணத்தில் சிறந்தான் இணைப் பதங்களின் வனப்பினைக் காக்க

காலம் முழுதும் மேனி அழகை கட்டியே காக்க
கதாயு தத்தால் பகையை வினையைக் கடிதிலே நீக்க
நாளும் பொழுதும் நலிவு றாமல் நல்லவன் காக்க
நவ கோள்களின் துயரம் நீக்கி நன்மையைச் சேர்க்க

காக்க காக்க கவசமாய்க் காக்க

ஓம் அஞ்சநேயாய வித்மஹே
வாயு புத்ராய தீமஹி
தந்நோ ஹநுமான் ப்ரசோதயாத்

33. மங்கள மாருதி

குங்குமம் கொழிக்கும் முகம் - ஜெய
மங்களம் அளிக்கும் கரம்
சஞ்சீவி மலையைத் தாங்கி வருகிறான்
துன்பங்கள் அனைத்தும் தூள் தூள் தூளே

ஜெய ஜெய ஜெய ஜெய ஹநுமான்
ஜெய ஜெய ஜெய ஜெய ஹநுமான்
(குங்குமம்)

துணிவே இவனின் தோள்கள் வாழ்க
கனிவே இவனின் நெஞ்சம் வாழ்க
பணிவே இவனின் மணிச்சிரம் வாழ்க
வணங்கிய தொடைகள் திருவடி வாழ்க

ஜெய ஜெய ஜெய ஜெய ஹநுமான்
ஜெய ஜெய ஜெய ஜெய ஹநுமான்
(குங்குமம்)

நாமக் கல்லில் விஸ்வ ரூபம்
சுசீந் திரத்தில் ஸ்வயம் ப்ரகாசம்
ஆழ்வார்ப் பேட்டையில் ஆனந்தம் கோலம்
அன்பர்கள் நெஞ்சில் தேவனின் பாதம்

ஜெய ஜெய ஜெய ஜெய ஹநுமான்
ஜெய ஜெய ஜெய ஜெய ஹநுமான்
(குங்குமம்)

34. வேண்டுதல்

வேண்ட வேண்ட வெண்ணெயைப் போல் உருகும்
ஆஞ்ச நேயன் அவனை நினைப்போம்
வியாழக் கிழமையில் குருவாய் நினைத்து
வெண்ணெயைச் சாற்றி மனமாரத் துதித்து
(வேண்ட வேண்ட)

நாயகன் வாலில் நவக்ரஹம் இருப்பதால்
நாற்பத் தெட்டு நாள் இடுவோம் சந்தனம்
குங்குமப் பொட்டிட்டு கும்பிட்டு வந்தால்
குறைகள் அகலும் உறுதி சத்தியம்
(வேண்ட வேண்ட)

ராமா எனுமுன் ஹனுமான் நிற்பான்
நாமசங் கீர்த்தனம் கேட்டுக் களிப்பான்
மாருதி பூஜை செய்வார் மனத்தில்
ஏது தளர்ச்சி மாறா வளர்ச்சி
(வேண்ட வேண்ட)

35. நமஸ்காரம்

இணையற்ற பராக்ரமம்
ஸ்வர்ண ப்ரகாஸம்
இதழினில் மந்தஹாஸம்
காலாக்னி ஜ்வாலையும்
காலருத்ர அக்னியும்
ஓடச் செய்யும் அட்டஹாசம்

ஜெய் கோஸ்வாமி துளசிதாசர்
ஸமர்த்த ராமதாசர்
கும்பிட்ட ஞான ஒளியே (இணையற்ற)

கோழையும் வீரன் ஆவான்
ஏழையும் குபேரன் ஆவான்
வாழவைக்க வந்த தேவா
சாமீ.... உன்னைப் போலே
யாருண்டு புத்தி சொல்ல
ஓங்கார நாம ரூபா

ஜெய் பல தாம ராம தூதா
விக்ரம மஹாவீரா
பஜரங்கி எனும் நாமா (இணையற்ற)

கல்யாண குணங்கள் யாவும் கடல்போலப் பெருகுகின்ற
காஞ்சன மேனி கண்டோம்
கவச குண்டலம் ஆட / மான் தோலும் பூணூலும்
கவின் மார்பும் / கண்டோம் கண்டோம்

ஜெய் சமய சஞ்சீவி நீயே
அணைப்பதில் தாயைப்போலே
முனிவரும் போற்றும் யோஹா

நமஸ்காரம் ஐயாஎங்கள் நமஸ்காரம் உந்தன் பாதம்
சரணா கதம் ஐயா (இணையற்ற)

36. பீமரூபி

உத்தம பாவனை
மகத்தான சாதனை
ருத்திரன் அம்ஸம் கொண்டவரே
கட்டுக் குலையாத
பட்டுத் திருமேனி
காட்டில் சஞ்சரிக்கும் ராமதூதரே
ஸ்ரீராம் ஜயராம் ஜெய ஜெய ராம் எனும்
தீவிர வைஷ்ணவ சிகாமணியே
ஆஞ்சநேயரே - வீர - ஆஞ்சநேயரே
(உத்தம பாவனை)

துக்கத்தை நீக்கியே உற்சாகம் தரும்
தூயவரே லோக நாயகரே
நெற்றியை உயர்த்தியே கைதூக்கிக் காட்டியபின்
வெற்றி உறுதி ஐயா புண்ய சீலரே
ஸ்ரீராம் ஜயராம் ஜெய ஜெய ராம் எனும்
தீவிர வைஷ்ணவ சிகாமணியே
ஆஞ்சநேயரே - வீர - ஆஞ்சநேயரே
(உத்தம பாவனை)

தங்கக் கச்சம் அணிந்து ஒட்டியாணம் பூட்டி
தாவி வருகின்ற வானரரே
தலைமணி கீரிடம் வரை வாலை வளைத்தசைத்து
தனி அழகு காட்டும் சுந்தராங்கரே
ஸ்ரீராம் ஜயராம் ஜெய ஜெய ராம் எனும்
தீவிர வைஷ்ணவ சிகாமணியே
ஆஞ்சநேயரே - வீர - ஆஞ்சநேயரே (உத்தம பாவனை)

37. பரமபாகவதன்

ராமதூத மஹாதீர ருத்ரவீர்ய ஸமுத்பவ
அஞ்சனா கர்ப்பஸம்பூத வாயுபுத்ர நமோஸ்துதே

ஸ்ரீராமபக்த ஹனுமான் / பரம பாகவத வரேண்யன்
வீரம் ஞானம் பக்தி விஸ்வாஸம்
மனபலம் வைராக்யம் விநயம் பாசம்
தன்னலம் அற்ற சேவை த்யாகம்
நிறை குணம் யாவும் இயல்பாய்க் கொண்டான்
(ஸ்ரீ ராம பக்த ஹனுமான்)

வேதங்கள் யாவையும் நாவினில் வைத்தான்
ராமனை கணந்தொறும் நெஞ்சினில் வைத்தான்
சுக்ரீவனைக் காத்து நாடாள வைத்தான்
துன்மார்க்கர் மாளிகைக்குத் தீயை வைத்தான்
(ஸ்ரீ ராம பக்த ஹனுமான்)

சீதையின் சோகம் மாற்றிய நேயன்
சிரஞ்சீவி என அவள் வாழ்த்திய தூயன்
ராவணன் அகந்தையை அடக்கிய தீரன்
வாலால் ஆசனம் அமைத்த ஒய்யாரன்
(ஸ்ரீ ராம பக்த ஹனுமான்)

சஞ்சீவி பர்வதம் தாங்கிய தோளன்
சமயத்தில் வந்து காக்கும் தயாளன்
தத்துவ வித்தகன் தைரிய புருஷன்
மங்களச் செய்திகள் தந்திடும் தூதன்
(ஸ்ரீ ராம பக்த ஹனுமான்)

38. ஐம்பூதங்களும் அவன் வசம்

ராமனின் நாமம் இருக்கின்ற வரைக்கும்
நானும் இப் பூமியில் வாழ்வேன் என்றாய்
ராமா யணநூல் படிக்கின்ற இடத்தில்
யாரோ ஒருவராய் அமர்ந்திருக் கின்றாய்
ராம ராம என அமர்ந்திருக் கின்றாய்
(ராமனின்)

அஞ்சனை புதல்வா ஆஞ்ச நேயா
தஞ்சம் என்போரை காக்கும் நேயா
ஐம்பூ தங்களும் உன்னில் அடக்கம்
ஆனாலும் நீதான் எத்தனை அடக்கம்
(ராமனின்)

காற்றின் மகன் நீ கடல் தாண்டு வாயே
ஆற்றலோடு மலைபெயர்த் தாயே
மாற்றார் உணர தீ வைத் தாயே
மண்மகள் சீதையை போற்றி நின்றாயே

ஆகாயம் தொடும் உன் அகண்ட ரூபம்
சூரியனைக் கவ்வும் வீரப்ர தாபம்
கவலைகள் நீக்கும் நின் கதா..... யுதம்
காக்கும் திருப்பாதம் நமாம் யஹம்
(ராமனின்)

ஓம் ஜெய் ஜெய் ஹநுமா கருணாமூர்த்தி
ப்ரம்மஸ்வரூப ப்ரம்மச்சாரி

39. கர்மயோகி

செயலை முடிக்க அயராது உழைக்கும் கர்ம யோகியே
ராமனின் அன்பில் தன்னை இழந்த பக்தி யோகியே
வானும் மண்ணும் வணங்கிடும் மாபெரும் ஞான யோகியே
தானெனும் அகந்தை நீங்கிய மாதவ ராஜ யோகியே

ஆஞ்சநேயரே - ஜெய ஜெய
ஆஞ்சநேயரே (செயலை முடிக்க)

மண்ணில் வந்தது தெய்வம் என்று தான் கண்டு கொண்டதுன் நெஞ்சம்
அன்று நாள் முதல் எண்ணம் சொல் செயல் அனைத்தும் அவனுக்கே தஞ்சம்
பண்ணும் தாளமும் பருந்தும் நிழலும் போல் கண்ணும் கருத்துமாய்க் காத்தாய்
என்றும் வாழ்ந்திடும் வாழ்த்துப்பெற்று உன் இதயக் கமலத்தில் சேர்த்தாய்

ஆஞ்சநேயரே - ஜெய ஜெய
ஆஞ்சநேயரே

அன்பின் சின்னமே அறத்தின் வண்ணமே ஆனந்த அம்ருத கலசமே
எண்ணும் போதெலாம் கண்முன்னே நிற்கும் ஏகாந்த சிங்கார ரூபமே
அன்னை சொல்படி வாழ்ந்து காட்டிய கண்ணிய கற்பக விருக்ஷமே
தன்னை நம்பினார் தம்மைக் காத்திட தன்னையே தரும் தெய்வமே
(செயலை முடிக்க)

40. ஸ்ரீ ஆஞ்சநேயர்

அஞ்சனை புதல்வா ஹநுமா
வரம் வேண்டினேன் வந்தனம்
சந்ததம் உன் அநுக்ரஹம்
தரவே வருவாயே நீ ...... (அஞ்சனை புதல்வா)

அபயக் கரம் காட்டுக....
தீன கருணா மூர்த்தியே
ஆபத் பாந்தவா ரக்ஷகா
வாயு பெற்ற மாருதி (அஞ்சனை புதல்வா)

அசோகவன சீதா சோகம்
அகலச் செய்த தீரனே
ராம லக்ஷ்மணர் விசாரம்
உன்னாலே தீர்ந்ததே (அஞ்சனை புதல்வா)

சுக்ரீவனின் தன்மானம்
தனைக்காத்த தோழனே
கடல்தாண்டிய விஸ்வரூபம்
கை கூப்பி தொழுதேனே (அஞ்சனை புதல்வா)

ஆஞ்சநேயா மஹாவீரா
அதிசூரா பராக்ரமா
கொடுக்கின்ற கற்பக விருக்ஷம்
உன்னாலே ஜெயம் நிச்சயம்
அருள் ப்ரதாபம் சீலம் / சர்வ வித்யா பூஷணம்
கீத ஞானம் / ஸநிதம கமகரி ஸமதநிஸ
ஓங்காரம் சிவரூபம் நமஸ்தே ஹநுமந்தனே.....
(அஞ்சனை புதல்வா)

41. பஞ்சமுக ஆஞ்சநேயர்

ஜகத் ஸ்ருஷ்டி நாயகன் பஞ்சமுகன்
தஸபுஜ த்ரிநேத்ர ஆஞ்சநேயன்
அனந்த மாங்கலத்தில் ஸ்கந்த கிரியில்
அபயம் தந்திடுவான் கண்டு மகிழ்வோம்
ஜெய் ஹனுமான் (ஜகத் சிருஷ்டி)

அமிர்தம் வழங்குகின்ற நரசிம்மர்
ஆலத்தை அழிக்கின்ற கருடாழ்வார்
நிலைநிறுத்தி வாழவைக்கும் வராஹப்பெருமான்
குரு மண்டல மந்த் ரரூப ஹயக்ரீவர்
நால்வரும் நான்முகம் ஆகிடுமே
நடுவினில் அவன் முகம் தோன்றிடுமே
ஜெய் ஹனுமான் (ஜகத் சிருஷ்டி)

அங்குசம் ப்ரம்மன் அருளுகின்றான்
சங்கு சக்ரம் விஷ்ணு தருகின்றான்
கோதண்டம் ராமன் கொடுக்கின்றான்
பாசம் எமதர்மன் படைக்கின்றான்
இறக்கைகளைக் கருடன்
எடுத்துக்கொள் என்கிறான்
பத்மம் தருகிறாள் பார்வதி
சகல தெய்வமும் சக்தி களைத்தர
சமஷ்டி ரூபமாய்த் திகழ்கின்றான்
சர்வ மங்களமும் பொழிகின்றான் (ஜகத் சிருஷ்டி)

42. நம்பிக்கை தேவன்

நம்பிக்கையின் செய்தி யாவும் உந்தன் ரூபத்தில்
வந்தே தீரும் - ஜெயம் - தந்தே தீரும்
துன்பத்தின் எல்லைக் கோட்டில் நின்ற நேரத்தில்
துணையாய் மாறும் - நல் - அபயம் கூறும்

மாருதி அன்பின் சாரதி
மாருதி ஜெய் ஜெய் மாருதி
(நம்பிக்கையின்)

மனைவியைப் பிரிந்த சுக்ரீவன் மானத்தை
காக்க வரிசெய்த சீலனே
மரணம் நேராமல் ஜானகி தேவியை
தடுத்து நிறுத்திய தீரனே

விஷத்தால் சோர்ந்த ராம லக்ஷ்மணரை
வேளையில் எழுப்பிய வீரனே
நெருப்பில் விழச் சென்ற பரதனைக் காப்பாற்ற
ஓடோடி வந்த தேவனே

மாருதி அன்பின் சாரதி
மாருதி ஜெய் ஜெய் மாருதி
(நம்பிக்கையின்)

அஞ்சா நெஞ்சில் என்றும் இருப்பது
சீதா ராமனின் தோற்றமே
ஆஞ்ச நேய நின் நாவில் ஒலிப்பது
தாரகம் ராம நாமமே

பக்தி செய்வதில் உனக்கிணை நீயே
விஸ்வ ரூபம் எங்குமே
உத்தமா உன்னை வணங்கிடு முன்னே
உந்தன் வணக்கம் தான் முந்துமே

மாருதி அன்பின் சாரதி
மாருதி ஜெய் ஜெய் மாருதி (நம்பிக்கையின்)

43. கோளறுக்கும் கோளரி

வல்லவன் நல்லவன் வாயுமைந்தன்
அஞ்சனையின் குமரன் ஆஞ்சநேயன்

(வல்லவன்)

சொல்லின் செல்வன் தூய ப்ரம்மச்சாரி
துளசிதள ப்ரியன் என்றும் சிரஞ்சீவி

(வல்லவன்)

இதயத்தில் ராமனைப் பதியவைத் துள்ளவன்
எண்ணியதைச் செயலில் செய்து முடிப்பவன்
உதய சூரியனைத் தாவிப் பிடிப்பவன்
உத்தமி ஜானகி அன்பில் திளைப்பவன்

(வல்லவன்)

ராம்ராம் எனச் சொன்னால் அநுமன் முன் நிற்பான்
நவக்ரஹ தோஷம் அணுகாது நமைக் காப்பான்
ராகவேந்த்ர ஞானி பூஜையில் அவனிருப்பான்
மூவுலகம் முழுதும் விஸ்வரூபம் எடுப்பான்

(வல்லவன்)

44. சரணம் சரணம் ஐயா

ஹநுமந்த ஹநுமந்த ஹநுமந்தா சரணம்
அடியார்கள் குறைதீர்க்கும் ஹநுமந்தா சரணம்

ஹநுமான் எழுந்தான் - விஸ்வ
ரூபம் எடுத்தான்
அலைகடல் மேலாகப் பறந்தானே
தேவர்கள் வாழ்த்திட ஜெயம் ஜெயம் என்றானே
(ஹநுமான்)

சக்தியைத் தருவான் புத்தியைத் தருவான்
தைர்யம் வீரம் தருவான்
நித்தமும் அவனை பக்திசெய் தாலே
வெற்றி தேடித் தருவான்
பா.......ரி ஜா.......த
வனத்தினில் இருப்பானே
பாரதப் போரினில்
கீதையைக் கேட்பானே
ஐம்பூதம் ஐம்புலன்கள்
அடங்கிட ஒடுங்கிட நிமிர்ந்தே நிற்பவன் (ஹநுமான்)

சஞ்சீவி மலையைத் தோளினில் தாங்கி
வந்த வீரன் அவனே
சந்ததம் ராம மந்திரம் சொல்லும்
சாந்த மூர்த்தி அவனே

என்றென்றும் துணையாக இருப்பவன் அவன் தானே
எதை நாம் கேட்டாலும் கொடுப்பவன் அவன் தானே
ஆழ்வார்ப் பேட்டையிலே
ஆனந்தக் கோலத்தில் அருள்தரும் வரதனே (ஹநுமான்)

45. ஈரேழு பதினாலு லோகம் உனதே

ஈரேழு பதினாலு லோகம்
இம் மென்னும் முன்னாலே தாவும்
வாயு குமாரன் ஆஞ்ச நேயன்
கோயில் தரிசனம் கோடிப் புண்ணியம்
தாரை திருச்சின்னம் ஒலிக்கிறது
ஆலய மணி ஓசை அழைக்கிறது (ஈரேழு)

ஓங்கி வளர்ந்து வரும்
வானம் தொடும் உருவம்
நாமக் கல்லில் ஆச்சர்யம்
சுசீந்தி ரத்தில்காட்சி
உலகே வியந்து நிற்கும்
மணிமங்கலம் மறக்குமோ
திருச்செங் கோட்டிலே அமர்ந்த கோலம்
திருக் கண்ணங்குடியிலே அமைதிக் கோலம் (ஈரேழு)

இடக்கையை உயர்த்திடுவான்
கதை தூக்க பகை போக்க
வாலாலே தாக்கி நொறுக்க
வலக்கையை தொடை வைத்து
வஞ்சகர்மேல் கால் வைத்து
தனி வீரம் காட்டுகின்றானே

ஜெய முரசு கொட்டி சிந்தையினைப் பற்றி
நைனா மலை அடிவாரம் அவன் நிற்பான்
நாராயண புரத்தினிலே அருள் கொடுப்பான்
ஸ்ரீ முஷ்ணம் ராம கதை பாராயணம்
சோளிங்கம் யோக நிலை பேரின்பம்
ஹநுமான் வருவான் வந்திடுவான்
தொழுதால் அருள் வான் துணைநிற்பான் (ஈரேழு)

46. சுக்ரீவன் தோழன்

சுக்ரீவன் தோழா நமோ நமோ
ராமனின் தூதா நமோ நமோ
சாந்தமும் வீரமும் சேர்ந்தவனே - ஒரு
சரித்திரம் படைத்த விசித்திரனே

(சுக்ரீவன்)

வாயு புத்திரா நமோ நமோ
வானர சூரா நமோ நமோ
பக்த வத்ஸலா நமோ நமோ
பரம தயாளா நமோ நமோ - ஜெய
மஹா யோகியே நமோ நமோ

(சுக்ரீவன்)

சொல்லின் செல்வா நமோ நமோ
தூயப்ரம்மச் சாரி நமோ நமோ
ஜானகி நேயா நமோ நமோ
சர்வ மங்களா நமோ நமோ - ஜெய
சர்வ மங்களா நமோ நமோ

(சுக்ரீவன்)

47. அரவிந்தப் பொற்பதம்

திருவடி அரவிந்தம்
சுகமக ரந்தம்
அநுமனின் நேசம்
ஆறா ஆமுதா
(திருவடி)

துளசி தளம் அவன் தோளுக்கு அணிகலம்
வெற்றிலைப் பட்டியே மாலை ஆகிடும்
வெண்ணெயை மேனியில் பூசிட ஆனந்தம்
வீணையின் சுக சுரம் கூத்தாடச் செய்திடும்
(திருவடி)

ராமாயணம் கேட்க ஆவலோ அதிகம்
பாராயணம் பஜனை ஒரு பக்தி சமுத்ரம்
வாலாட தலையாட தன்னையே மறக்கும்
மாருதி ராயனுக்கு தலை தாழ்ந்த வணக்கம்
(திருவடி)

48. அவதாரம் - அநுகூலம்

ஹநுமன் அவதாரம் - ஆனந்தம்
பெறுவோம் அநுகூலம்
ஹனுமன் அவதாரம் - ராமனின்
அன்பன் அவதாரம்
ஹநுமன் அவதாரம் - ஜெயஜெய
ஹநுமன் அவதாரம்

(ஹநுமன்)

க்ஷேமம் கூடும் ஜெயம் வந்து சேரும்
மாருதி நேயம் மஹிமைப்ர தாபம்

(ஹநுமன்)

அஞ்சனை பாலன் வெஞ்சமர் வீரன்
உத்தமத் தோழன் தத்துவ சீலன்

(ஹநுமன்)

வாயுவின் மைந்தன் வானர சூரன்
ராமனின் தூதன் ஜானகி நேயன்

(ஹநுமன்)

சொல்லின் செல்வன் சொன்னதைச் செய்வோன்
நல்லோன் வல்லோன் பகைவர்க்குக் காலன்

(ஹநுமன்)

49. மதுரநாமம்

மாருதி திருநாமம் - மதுரம்
யாவுமே ஜெயம் ஆகும்
மாருதி திருநாமம் - அமுதம்
யாவுமே ஜெயம் ஆகும்
மாருதி திருநாமம் - புனிதம்
யாவுமே ஜெயம் ஆகும்

ராமா என்றால் ஹநுமான் வருவான்
அபயம் தருவான் அநுக்ரஹம் புரிவான்
(மாருதி)

இன்றும் என்றும் இவன் சிரஞ்சீவி
துன்பம் நீக்கும் அருள் சஞ்சீவி
(மாருதி)



50. ஹநுமத் கவசம்

ஸ்ரீராம தூதன் சிரஸைக் காக்க
வானர வீரன் வதனம் காக்க
விபீஷணன் நண்பன் விழிகளைக் காக்க
சுக்ரீவன் தோழன் செவிகளைக் காக்க

சொல்லின் செல்வன் மலர்வாய் காக்க
சுந்தர ரூபன் நாசியைக் காக்க
சாந்த மூர்த்தி கழுத்தினைக் காக்க
ஜானகி தாஸன் தோளினைக் காக்க

மாருதி ராயன் மார்பினைக் காக்க
வாயு புத்திரன் வயிற்றினைக் காக்க
மஹா தீரன் கரங்களைக் காக்க
மந்திர ரூபன் இடையினைக் காக்க

பெரும் பிரம்மச்சாரி குறிகளைக் காக்க
என்றும் சிரஞ்சீவி கால்களைக் காக்க
அஞ்சனை புதல்வன் பின்புறம் காக்க
அநுமந்த சாமி பாதங்கள் காக்க

காக்க காக்க கவசமாய்க் காக்க
காலம் முழுதும் நோயின்றிக் காக்க
ஆஞ்ச நேயன் ஆபத்தில் காக்க
வாலால் பகைவர் வாதையைப் போக்க
காக்க காக்க கவசமாய்க் காக்க

51. ஸ்ரீ பஞ்ச முக ஆஞ்சநேயர்

வராஹர், நரசிம்மர், ஹயக்ரீவர், கருடனொடு
ஹனுமனும் சேர்ந்த முகம்
சரண மெனச் சொன்னால் மரண பயமும் போக்கும்
தயை செயும் பஞ்சமுகம்

(வராஹர்)

கலிகா லத்தில் கண்கண்ட தெய்வம்
கருணைத் திரு உருவம்
கவலை யெல்லாம் களைந்து தலைநிமிர விரைந்து
அருளும் தாயின்மனம்

(வராஹர்)

அமைதியில் யோகம் பயிலும் ஓர் இடம்
பாரி ஜாத வனம்
இதழ்களில் மலரும் தாரக மந்திரம்
ராம சங் கீர்த்தனம்
பில்லி, சூனியம், பேய், பிசாசென
தொல்லைகள் சூழாவண்ணம்
அல்லும் பகலும்நமைக் காத்திடும் ஓர்பலம்
ஆஞ்சநேய தவம்

(வராஹர்)

52. இராம த்யானம்

ராமனின் நாமம் அவன் வேதம்
ராமனின் ரூபம் அவன் த்யானம்
ராம் ராம் ராம் ராம்
ராம் ராம் ராம் ராம்
(ராமனின் நாமம்)

ஹநுமான் எனும் ஒலி ஓங்காரம்
'அ'கரம் 'உ'கரம் 'ம'கரம்
சோகம் மாற்றிடும் ஓர் சுந்தரனே
அசோக நகரினிலே எழுந்தனனே
(ராமனின் நாமம்)

அடிப்பொடி எனும்படி ஒரு தொண்டன்
உயிரையும் தரவரும் ஒரு நண்பன்
முறைப்படி செயல்செயும் நல் அமைச்சன்
முயற்சியில் தளராத பெரு மனத்தன்
(ராமனின் நாமம்)

அஞ்சேல் எனச் சொல்லும் அநுமந்தன்
அபயம் என்பார்க்கு அருள்நேயன்
சஞ்சீவி மலை யெடுத்த ஜெய தீரன்
சந்ததம் வாழ்கின்ற வர சீலன்
(ராமனின் நாமம்)

53. கண்ணிலே நீ

கண்ணில்நின் திருக் கோ லந்தான் ஹநுமா
நின்பதம் சரண்
நெஞ்சிலே வந்தனை செய்தேன்
அஞ்சா தே என் பாய் நீயே
நின்..... பதம் சரண்
ஹநுமா அருள்தா நின்..... பதம் சரண் (கண்ணில்நின்)

பொன் மேனி மந்திர ரூபா
புதுமை யாம் தந்திர ரூபா
சத்ய ஜோதி மய மாகும் நித்யா னந்த ரூபா
உலக பந் தம் பாசம்
நவ க்ரஹ தோஷம் த்வேஷம்
சர்வ பா வம் பிணி நீக்கும் ஆஞ்ச நேயனே
நின்..... பதம் சரண்
ஹநுமா அருள் தா நின்..... பதம் சரண் (கண்ணில்நின்)

சஞ் சீ வியைத் தாங்கி வந்தோய்
எந் தன் ஜீ வ சக்தி காக்க
அஞ்சனா.... தேவி யின் குமரா
ஆ.... பத்தில் காக்க காக்க
எங்கே நான் அங்கேயே காக்க
எப் போதும் என்னை காக்க
அன்பாலே நீ என்றும் காக்க
நே.... ரிலே நின்று காக்க
நின்.... பதம் சரண்
ஹநுமா.... அருள்தா நின்.... பதம் சரண்

54. தூயவன்

ஜானகி அருள் நெஞ்சம்
வாழ்கென வாழ்த்திடும்
தூயனைப் பாடுங்களே - ராம்ராம் எனும்
அநுமனைப் பாடுங்களே
பாடுங்களே பாடுங்களே (ஜானகி)

ராவணன் முன்னிலையில்
ராமதூதன் நானென்றே
வாலினால் பீடமிட்ட வீரனவன்
இலங்கைக்குத் தீவைத்த போர் மறவன்
அநுமனைப் பாடுங்களே
பாடுங்களே பாடுங்களே (ஜானகி)

பழமிது என்றெண்ணி கதிரவனை விழுங்க
விரைந்த குழந்தைப் பருவம்.... (ஆஹா ஒரு)
பெருங்கடல் தாண்டஒரு நொடியில் விஸ்வரூபம்
சீதை உயிர்காத்து சிரஞ்சீவி யான திறம் (ஜானகி)

மணிமுடி சூடிடும் திருக்காட்சி மறவாது
இதயத்தில் பதித்து வைத்தான்..... ஸ்ரீ ராமசந்த்ரன்
திருவடி சேவைகண்டு திருவடி என்றே கூறும்
சீரும் நற்பேறும் தேடி வந்த தொண்டன் இவன்
(ஜானகி)

55. ஒருமண்டல நோன்பு

நினைத்த காரியம் நிறைவேறும் - நின்னை
முழுமையாய்ச் சரணடைந்தால்
அடிமுதல் நுனிவரையில்
கமழும் சந்தனப் பொட்டு வைத்தால்
அதன் மேல் குங்குமம் இட்டு வைத்தால் (நினைத்த)

ஒரு மண்டலக் காலம் உனை நினைத்து
உறுதியாய் உன்நாமம் தனை ஜபித்து
இடர்தனை களைஎன வேண்டி நின்றால்
எழுவாய் வருவாய் விரைவாய் அருள்வாய்
எதிரிகள் பொடிபட பயமது விடுபட (நினைத்த)

முடுகு: ஒரு நூற் றெட்டு உளுந்து வடைமாலை
வெற்றித் தோளில் வெற்றிலைப் பட்டி
உடலெலாம் வெண்ணெய் திராட்சைக்கனிகள்
நகை அலங்காரம் ப்ரமாதம்
ஆழ்வார்ப் பேட்டையில் நின் ஆட்சி ப்ரதாபம்
அதிகாலை முதல் ஆனந்தக் கோலம்
துளசி தளம் கொடு துயருக்கு விடைகொடு (நினைத்த)

மார்கழி மாதம் அமாவாசை நிறைநாள்
மாருதி நீதான் பிறந்தநாள் ஜயந்தி
கோலம் பஜனைக் கொண்டாட்டங்கள்
வாழை மாவிலை தோரணவாசல்
சகஸ்ர நாமம் தயிரன்னம் படையல்
இனிப்பினை வழங்கிடு இன்னல்கள் களைந்திடு
(நினைத்த)

56. ஜெயசீலன்

மாருதி ராயா பலபீமா
வீர மார்த்தாண்ட ஜெய சீலா
வாயு குமாரா ஸ்ரீ மந்தா
ராம தூதா ஹநுமந்தா
(மாருதி ராயா)

ராக வேந்த்ரர் பூஜையிலே
ஆடிப் பாடும் ஆனந்தா
வானரர் தலைவா வா வா வா
ராமனின் தோழா ஹநுமந்தா
(மாருதி ராயா)

ஞான விநோதா ஆஞ்சேயா
ஜானகி ரக்ஷகா மஹானுபாவா
கான நாட்டிய கலாரசிகா
ராமனின் சேவகா ஹநுமந்தா
(மாருதி ராயா)

சோகம் நீக்கி சுகம் நல்கும்
சுந்தர மோஹன மஹாதேஜா
பூமி எங்கும் கோயில் கொண்டாய்
ராம பக்தா ஹநுமந்தா
(மாருதி ராயா)

நமஸ்தே ஸதா ப்ரம்ம சர்யாய துப்யம்
நமஸ்தே ஸதா வாயு புத்ராய துப்யம்
நமஸ்தே ஸதா பிங்காள கூாய துப்யம்
நமஸ்தே ஸதா ராம பக்தாய துப்யம்

57. ஸ்ரீ ஆஞ்சநேயர் திருக்கோயில்கள்

நாமக்கல் நகரினிலே நின்ற திருக் கோலம்
கடல்தாவும் அவசரம் விஸ்வரூபம்
ஏணிமேல் நின்றுதான் அபிஷேகம்
ஆஞ்சேயர் அநுக்ரஹம் மிகவிஷேஷம் (நாமக்கல்)

மயிலையில் இவர் மிகவும் ப்ரஸித்தம்
மணிமங் கலத்தில் சர்வ மங்களம்
அல்லிக்கேணி குளப்படியில் மலயமாருதம்
கண்ணனை நோக்கிடும் காட்சி அற்புதம்

ஆழ்வார்ப் பேட்டையில் அலங்காரம்
அசோக்நகர் வருவோர்க்கு ஜெயம் நிச்சயம்
மேற்கு மாம்பலத்தில் வரப்ரசாதம்
ஸ்ரீ முஷ்ண நந்தவனம் சேவை சாதனம்

பாதிரிப் புலியூரில் பல அதிசயம்
செஞ்சிக் கோட்டைவழி துஷ்ட நிக்ரஹம்
திரு வஹீந்த்ர புரம் சஞ்சீவி தானம்
திருப்பத் தூரினிலே சுந்தரவீரம்

சோளிங்க புரத்தினிலே யோக தரிசனம்
களம்பூர் காக்களுர் கண்கொளாக் கோலம்
திருப்பதி அநுமனின் தாயின் தலம்
திருவேணி சங்கமத்தில் கிடந்த கோலம்

வையாவூர் அடிவாரம் காஞ்சிபுரம்
மாமல்லை செங்கை நங்கை நல்லூர்
சிருங்கேரி செகந்தராபாத் த்யாக துர்கம்
திருச்சி ரயிலடியில் ப்ரஸித்தம்

சித்தர் வழிபட்ட சாந்தவெளி
திருவிசை நல்லூரில் ஞானஒளி
கும்பகோணம் தூதுவன் வடிவாகும்
அனந்த மங்கலம் ஸ்கந்தகிரி பஞ்சமுகம்

ஸ்ரீ வைகுண்டம் அனந்தபுரம்
திருவெண்காடு திருப்பரையார்
மருந்து வாழ்மலை ராமேஸ்வரம்
மறக்க முடியாத சுசீந்திரம்

சிவகங்கை அவைட்டி கர்னாடகம்
சாங்க்லீ, தாகூர், பூனா மகாராஷ்டிரம்
பத்ராசலம் பொன்னூர் காஸா'புரம்
காசி, நாசிக், டில்லி, ஈழ்த்திலும்

எங்கு இல்லை எங்கள் ஜெய மாருதி
என்றென்றும் வாழ்கின்ற சிரஞ்சீவி
அங்கிங் கெனாதபடி அவன் உருவம்
நெஞ்சிலே வைத்தவர்க்கு பரம ஞானம்

நமஸ்தே ஸதா ப்ரஹ்ம சர்யாய துப்யம்
நமஸ்தே ஸதா வாயு புத்ராய துப்யம்
நமஸ்தே ஸதா பிங்களாக்ஷாய துப்யம்
நமஸ்தே ஸதா ராமபக்தாய துப்யம்

58. ஆனந்த ஐஸ்வர்யம்

ஆச்சார்ய ஹநுமானே - நின்
அவதாரம் ஆச்சர்யம்
அசையாத ப்ரம்மச்சர்யம்
ஆனந்த ஐஸ்வர்யம்

(ஆச்சார்ய)

பேச்சின்றி வாய்பொத்தி
பெரும்பணிவு கொண்ட உன்
கீர்த்திக்கு நிகருண்டோ
கிட்டாத பொருளுண்டோ

(ஆச்சார்ய)

எண்ணியதை முடிப்பதற்கு
எழுகடலும் தாண்டிடுவாய்
அன்பர்களைக் காப்பதற்கு
பெருமலையும் பெயர்த்திடுவாய்
உன்தயவைப் பெற்றவர்கள்
ஒரு குறையும் அற்றவர்கள்
உன்னையே நினைப்பவர்கள்
எந்நாளும் ஜெயிப்பவர்கள்

(ஆச்சார்ய)

நெஞ்சம் திறந்து
நெடியவனைக் காட்டியவனே
தஞ்சம் அடைந்தேன்
தயவுடன் அருளிடுவாய்

(ஆச்சார்ய)

59. மழுத்திண்தோள் மாருதி

விருத்தம்:

மழுத்திண்தோள் வீரனவன் மாருதி எழுந்தருளி
விழுப்புரத்தில் தீபவிழாத் திருக்கோலம் பூண்டிருப்பான்
வழுத்திடுவோம் அவன்நாமம் வரமருள்வான் ஞானத்தில்
பழுத்திடுவார் எல்லாரும் பக்திசெய வாரீரே!

பாடல்:

அஞ்சனைக் கொருசிறுவன் அநுமனெனும் பெயரோன்
தஞ்சமென் றடைந்தவரைத் தாய்போலக் காத்திடுவான்
(அஞ்சனை)

சஞ்சீவி மலைஎடுத்தோன் சிரஞ்சீவி வாழ்வுபெற்றோன்
அஞ்சன வண்ணனைத்தன் நெஞ்சுக்குள் வைத்திருப்போன்
(அஞ்சனை)

நாலு மறை அறிந்தோன் ஞானப் பதம்தெளிந்தோன்
வாலினால் தன்வலிமை இராவணனுக்கு உரைத்தோன்
காலனையும் வென்றோன் காற்றரசன் குமரன்
சீலமுள்ள நாதன் ஸ்ரீராம தூதனவன் (அஞ்சனை)

௬௦. ஜெய் ஜெய் ஹநுமா

ஜெய் ஜெய் ஹநுமா மாருதி ராயா
ஜெய் ஜெய் ஹநுமா சஞ்சீவி ராயா

ஹநுமா ஆஞ்சநேயா ஸ்ரீராம தூதா
ஹநுமானே உனைவேண்டி வரம் கேட்கிறேன்
திருக்கோயில் முன் நின்று சிரம் தாழ்த்தினேன்
உனைப் போல பெருவீரம் எனைச் சேரட்டும் - இந்த
உலகெல்லாம் புகழ் நிலை உருவாட்டும்
ஜெய் ஜெய் ஹநுமா மாருதி ராயா
ஜெய் ஜெய் ஹநுமா சஞ்சீவி ராயா (ஹநுமானே)

வாலியை வதம்செ ராமனை அழைத்து வந்தாயே
உன் வாலினால் இலங்கைக்குத் தீயை வைத்தாயே
ராவண னிடம் ஒரு தூதனாய்ச் சென்றாயே
சீதா தேவி சோகத்தை மாற்ற வந்தாயே
ஜெய் ஜெய் ஹநுமா மாருதி ராயா
ஜெய் ஜெய் ஹநுமா சஞ்சீவி ராயா (ஹநுமானே)

முடுகு : கடலைத் தாண்டிச் சென்றாயே - நான்
கண்டேன் சீதையை என்றாயே
ராமனைத் தொழுது நின்றாயே
சென்ற இடமெலாம் வென்றாயே
ஜெயமே எனக்கு வரவேண்டும்
தீயன எல்லாம் செலவேண்டும்
அபயம் வரதம் தரவேண்டும்
அஞ்சா நெஞ்சம் பெறவேண்டும் (ஹநுமானே)

கலைமாமணி
டாக்டர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம் அவர்களின் கவிதை படைப்புகள்

1. விநாயகனே வினை தீர்ப்பவனே!
2. நீ அல்லால் தெய்வம் இல்லை - முருகா! (பாகம் - 1)
3. முருகா! முத்துக்குமரா! (பாகம் - 2)
3. அன்பே சிவம்!
4. திருப்பதி மலை வாழும் வெங்கடேசா!
5. சாமி திந்தக்கத்தோம் தோம்!
   ஐயப்பன் பாடல்கள் (பாகம் - 1 & 2)
6. ஸ்ரீ ராம்! ஜெயராம்!
7. கண்ணா! கார்மேக வண்ணா!
8. நவகோள் நாயகர்
9. நவராத்ரி நாயகியர்
10. ஸ்ரீ சக்ர நாயகி
11. என் தாயே ஈஸ்வரியே!
12. ஓம் சக்தியே! பராசக்தியே!
13. மாரி மகமாயி, காளி கருநீலி
14. அம்மன் பாமாலைகள்
15. செல்வமே! திருமகளே
16. ஜெய ஜெய சங்கர!
17. ஷீரடி செல்வம்

18. அருள் ஒளி

(ஸ்ரீ யோகிராம் சுரத்குமார் பாடல்கள்)

19. ஞாலம் போற்றிய ஞானியர்

20. மாதாவே! மரியே...!

21. மாசிலா ஏசு

22. மழலை செல்வங்கள் (குழந்தை பாடல்கள்)

23. நிலா நிலா ஓடிவா....! (1) (குழந்தை பாடல்கள்)

24. நிலா நிலா ஓடிவா....! (2) (குழந்தை பாடல்கள்)

25. தம்பி உன்னை நம்பி! (குழந்தை பாடல்கள்)

26. புகழோடு தோன்றுக (சான்றோர் பாடல்கள்)

27. காதல்! காதல்!

28. என் இரு விழிகள்

29. எண்ணிப் பார்க்கிறேன்

30. தமிழ் மொழிபெயர்ப்புகள் - (பாகம் - 1)

31. தமிழ் மொழிபெயர்ப்புகள் - (பாகம் - 2)

32. தமிழ் மொழிபெயர்ப்புகள் - (பாகம் - 3)

33. பாத மலர்கள்

34. இசை மாலை

35. சாரல்

36. பொங்க புனல்

37. கங்குள் வெள்ளம்

38. இன்பத் தீ

39. செக்கர் வானம்

40. அன்னையடா அன்னை

41. வளரும் பயிர்

42. பொன்மாரி மொழிகள்

43. மலேசிய திருத்தலங்கள்

இருபதாம் நூற்றாண்டின் பக்தி இலக்கியப் படைப்பாளிகளில் குறிப்பிடத்தக்கவர். இவர் தனது பக்திப் பாடல்களால் தமிழிசைக்கு ஒரு புதிய எழுச்சியினை தோற்றுவித்தவர்......!

இருபதாம் நூற்றாண்டின் துவக்க ஆண்டுகளில், வேற்று மொழி கீர்த்தனைகளுக்கு, பாடலின் பொருள் விளங்காமல், வெறும் இராகத்திற்காகவும், இசைக் காகவும் தலையாட்டி வந்த தமிழ் மக்களுக்கு, எளிய மொழியில், இனிய தமிழில், தமிழிசையை அறிமுகம் செய்து வைத்தவர்......!

இவர்...

தமிழிசைக்கும், இறையுணர்விற்கும் இடையே பாலமாய் இருந்தவர்......!

உளுந்தூர்ப்பேட்டை சண்முகம் என்று அனைவராலும் அன்போடு அழைக்கப் பெறும் இவர் விருந்தோம்பலில் நிகரற்றவர்......!

ஏறக்குறைய நான்காயிரம் பக்தி இசைப் பாடல் களுக்கு மேல் இயற்றி சாதனை படைத்தவர்......!

இவர், திரை இசைப் பாடல்கள், மொழிமாற்றப் பாடல்கள், கவிதைகள், கவியரங்குகள், சிறப்புச் சொற் பொழிவுகள், பட்டிமன்றங்கள், பக்திப் பாடல்கள், தனிப் பாடல்கள் இயற்றுதல் போன்ற பல சிறப்புத் திறன்களைக் கொண்ட பன்முக ஆளுமை படைத்தவர்.

நெய்தல்
பதிப்பகம்